
பக்கத்தில் ஒரு
பத்தினிப்பெண்

## நூல் விவர அட்டவணை

| | |
|---|---|
| நூல் தலைப்பு | : பக்கத்தில் ஒரு பத்தினிப் பெண் |
| ஆசிரியர் | : ரமணிசந்திரன் |
| மொழி | : தமிழ் |
| முதல் பதிப்பு | : ஜூலை, 1996 |
| இரண்டாம் பதிப்பு | : ஆகஸ்ட், 1998 |
| மூன்றாம் பதிப்பு | : ஆகஸ்ட், 2000 |
| நான்காம் பதிப்பு | : ஜூன், 2002 |
| ஐந்தாம் பதிப்பு | : ஜனவரி, 2004 |
| ஆறாம் பதிப்பு | : செப்டம்பர், 2005 |
| ஏழாம் பதிப்பு | : மார்ச், 2007 |
| தாளின் தன்மை | : 11.6 kg. வெள்ளைத் தாள் |
| நூலின் அளவு | : 1 x 8 கிரவுன் |
| அச்சு எழுத்து | : 11 புள்ளி |
| மொத்தப் பக்கங்கள் | : 96 |
| உரிமை | : ஆசிரியருக்கு |
| நூல் கட்டுமானம் | : சாதா அட்டை |
| நூல் வெளியிடுவோர் | : அருணோதயம் 5/3, கௌடியா மடம் சாலை, இராயப்பேட்டை, சென்னை-14. |

**விலை ரூ. 30.00**

| | |
|---|---|
| அச்சிட்டோர் | : ஜீ.எம்.கிராபிக்ஸ், சென்னை-14. |


# பொருளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| 1. பக்கத்தில் ஒரு பத்தினிப் பெண் | 5 |
| 2. பெண் என்று பூமிதனில் பிறந்துவிட்டால் | 83 |

# பதிப்புரை

தமிழில் நல்ல நூல்களுக்கு தமிழ் மக்களின் வரவேற்பு குறையாது என்பதற்கு ரமணிசந்திரன் நாவல்கள் ஒரு எடுத்துக்காட்டு.

இலட்சிய கதா பாத்திரங்களைக் கொண்டு நல்ல கதையை தெளிவாகப் பின்னி, சுவையாகக் கொண்டு செல்லும் பாணி திருமதி ரமணிச்சந்திரனுக்கே உரியது. இதில் வரும் கதாபாத்திரங்களை எங்கோ பார்த்தது போன்ற பிரமை ஏற்படுவதில் வியப்பில்லை. அன்றாட நிகழ்வுகளைக் கொண்டே கதை பின்னப்படுவதால் வாசகர்களின் ஆர்வம் மேலும் மேலும் தூண்டப்படுகிறது. படிப்பவர்களுக்கு ஒருவித திருப்தி மனநிறைவு ஏற்படுகிறது. உயிரோட்டமுள்ள தமிழ் நடையும் உதவியாக இருக்கிறது. இத்தனை சிறப்புகளும் கொண்ட இந்த நாவலைப் படித்து மகிழுங்கள். கருத்தை எழுதுங்கள்.

— அருணோதயம் அருணன்

# பக்கத்தில் ஒரு பத்தினிப் பெண்

## 1

''கெட்டிமேளம்... கெட்டிமேளம்...'' என்று யாரோ குரல் கொடுக்க தவிலும் நாதசுரமுமாகப் பிளந்து கொட்டிக் கொண்டு இருந்தனர் மேளக்காரக் குழுவினர்.

ஒருகையில் காப்புநூலும், மறுகரத்தில் கைக்கடிகாரமும் அணிந்த இருகரங்கள் தாலி ஏந்தி வந்து தன் கழுத்தை அணுகுவதையும், அணிவிப்பதையும், மஞ்சள் குங்குமம் இடுவதையும் உள்ளூர ஒரு சிறு நடுக்கத்துடன் கண்டாள் சித்ரலேகா.

இன்றுவரை நேரடியாக அறிமுகமே நேர்ந்திராத ஒரு மனிதன் இனி அவளது வாழ்வின் ஆதாரம்! அவனை மையமாகக் கொண்டுதான் இனி அவளது உலகம் சுழன்றாக வேண்டும்.

அவனுக்கு என்ன பிடிக்கும்? எது பிடிக்காது? கோபக்காரனா? குணவானா? நாலு பேரோடு கலகலப்பாய்ப் பழகுவானா? தனிமை விரும்பியா?

சுத்தமாய் எதுவுமே அவளுக்குத் தெரியாது!

இனி அவனோடுதான் அவள் வாழ்க்கை நடத்த வேண்டும் என்று முடிவு செய்து திருமணத்தையும் நடத்தி வைத்திருக்கும் பெரியவர்களை நினைக்கும்போது அவளுக்குக் கொஞ்சம் கோபம்கூட வந்தது. படித்துக் கொண்டு இருந்தவளைப் பிடித்து இழுத்துக் கொண்டு வந்து மணையில் உட்கார வைத்துவிட்டார்களே!

அவள் தன் தாயிடம் சொல்லிக்கூடப் பார்த்தாள். "அந்த மனிதரைப் பற்றி எனக்கு ஒன்றும் தெரியாதே; எப்படி அவரைக் கல்யாணம் செய்துகொள்வது? திருமணம் என்றால் அது இரு மனங்களின் இணைப்பு அல்லவா?" என்று கதைகளில் படித்ததை எடுத்துக் கூறிக் கேட்டாள்.

ஆனால், அந்த அம்மாள், "போடி பைத்தியம்! திருமணம் ஆனால், தானாய் அவரைப் பற்றித் தெரிந்துவிட்டுப் போகிறது; மனமும் ஒன்றுபட்டுப் போகிறது! எங்கள் திருமணத்துக்குமுன் நான் உன் அப்பாவின் படத்தைக் கூடப் பார்த்தது இல்லை; ஆனால் நாங்கள் நன்றாக வாழவில்லையா?" என்று கேட்டபோது சித்ரலேகாவால் ஒன்றும் பதில் பேச முடியவில்லை.

ஏனெனில் அவள் பெற்றோரைப் போல ஒத்த கருத்துடைய கணவன் மனைவியைப் பார்ப்பது அரிது!

"ஆ... ஆனாலும் எனக்கு அவரைப் பற்றி ஒன்றும் தெரியாதே, அம்மா!" என்று கிளிப்பிள்ளையாய் முன் கூறியதையே திருப்பிப் படித்தபோது அவளது சுருதி மிகவும் இறங்கியிருந்தது. "எனக்குக் கொஞ்சம் பயமாய் இருக்கிறதே!" என்றாள் கலக்கத்துடன்.



மகளை அருகில் அமர்த்தித் தட்டிக் கொடுத்தாள் சகுந்தலா. "எல்லாம் திருமணம் வரைதான் இந்தப் பயம் எல்லாம் இருக்கும். மறுநாள் நீ எனக்குத் தைரியம் சொல்வாய். மாப்பிள்ளை நல்ல குணசாலி என்று அப்பா சொல்கிறார். நேரில் போய் கூடஇருந்து பேசிப் பழகிப் பார்த்துவிட்டுத்தான் சொல்கிறார். மாப்பிள்ளையை அப்படிப் பிடித்துப் போய்விட்டது என்கிறார். யோசித்துப் பார், அப்பா உனக்குக் கெடுதல் பண்ணுவாரா? மாப்பிள்ளை படத்தைப் பார்த்தால் நல்லவராகத் தெரியவில்லையா? பார்வைக்கும் பளிச்சென்று, நல்ல உயரமாய், உனக்குப் பொருத்தமாய்..."

படத்தைப் பார்த்தால் நன்றாகத்தான் தோன்றிற்று ஆனால், படத்தில் பார்ப்பதைக் கொண்டோ, சற்றுநேரப் பேசிப் பழகிப் பார்ப்பதில் இருந்தோ ஒருவரின் குணத்தைக் கண்டுவிட முடியுமா?

முக்கியமாக, மனைவியைப் பூப்போல வைத்துக் கொள்வானா... கொள்வாரா என்று எப்படிக் கண்டுபிடிக்க முடியும்?

அவளுக்குச் சுள்ளென்று ஒரு வார்த்தை சொன்னால் தாங்கமுடியாது. 'மோப்பக் குழையும் அனிச்சம்' மாதிரி டைப்! இங்கே எல்லோருமே அதற்குத் தகுந்து நடந்து கொள்வார்கள்.

ஆனால், அங்கே அதை எதிர்பார்க்க முடியுமா? முக்கியமாக அந்நியனான அந்தக் கணவனிடம்?

நேரில் ஒருதரம்கூடப் பார்த்து அறியாத ஒரு பெண்ணை அவனும்தான் எப்படி மணக்கத் துணிகிறான்? அவனுக்கும் இந்தக் கலக்கங்கள் இருக்கத்தான் செய்யும்?

ஆனால், மாதவன் சித்ரலேகாவைப் பார்த்திருக்கிறான் என்றாள் தாயார்.

''ஒரு மாதம் முன்பு ஒருநாள் சினிமாவுக்குச் செல்லும் வழியில் 'பரதா' ஓட்டலில் 'லாபி'யில் நம்மை உட்கார வைத்துவிட்டு அப்பா யாரையோ பார்த்துவிட்டு வருவதாகச் சொல்லிப் போகவில்லை? மாப்பிள்ளை உன்னைப் பார்ப்பதற்காகத்தான் அந்த ஏற்பாடு'' என்றாள் தாயார்.

''நீங்கள் என்னிடமும் சொல்லியிருக்கலாமே!'' என்று பாய்ந்தாள் மகள். ''நானும் அந்த மாப்பிள்ளையைப் பார்த்திருப்பேனே!'' என்று அவள் கேட்டதற்கு சகுந்தலாவிடம் பதில் இருந்தது.

''எப்படியம்மா சொல்வது? எங்களைப் பொறுத்த வரை நீ பேரழகிதான். நீ பிறந்ததில் இருந்தே, 'உன்னைக் கொத்திக் கொண்டு போக வரிசையில் வந்து நிற்பார்கள்' என்று நானும் அப்பாவும் பேசிக் கொள்வதுதான். ஆனால், அவரவருக்கு என்று கடவுள் போட்டு வைத்த துணையைத் தான் பார்த்ததும் பிடிக்கும்; மற்றவர் ரதியாக, மன்மதனாக இருந்தால்கூடப் பிடிக்காமல் போய்விட்டால்? உனக்கு மாப்பிள்ளையைப் பிடித்து, அவருக்கு உன்னைப் பிடிக்கவில்லை என்றால் உன் மனம் என்ன பாடுபடும்? நீ சும்மாவே 'ஞை ஞை!' அதனால்தான் உன்னிடம் சொல்லவில்லை'' என்று தாயார் சொல்லவும் மகளின் மனம் உருகிப் போய்விட்டது.

அவளது மகிழ்ச்சிக்காக, அவள் மனம் வருந்தக் கூடாது என்பதற்காக, எவ்வளவு பார்க்கிறார்கள் இந்த அம்மாவும் அப்பாவும்! இவர்கள், அவளுக்குப் பொருத்தமில்லாத ஒருவனிடமா அவளைத் தள்ளுவார்கள்? எல்லா வகையிலும் சிறப்பான ஒருவனைத்தான் மகளுடைய வருங்காலத் துணையாக, அலசி ஆராய்ந்து, தேர்ந்தெடுத்திருப்பார்கள் என்று எண்ணி ஒருவாறு நிம்மதி அடைந்தாள்.



ஆனால், என்னதான் உற்சாகமாக அவள் காட்டிக் கொண்டாலும், உள்ளூர அவளது மனதின் அடித்தளத்தில் ஒரு சிறு கலக்கம் இருந்து கொண்டே இருந்தது.

அந்தக் கலக்கம் தீராமல், இதோ தாலிகட்டி முடிந்து, அவள் மாதவனுடைய மனைவியாகவும் ஆகிவிட்டாள்!

அவளுடைய தந்தை கண்ணில் நீரும் உதட்டில் பெருமிதப் புன்னகையுமாக அவளது கையைப் பற்றி அவன் கையில் வைத்துத் தாரைவார்த்துக் கொடுத்தார்.

கணவனின் முன்பின் அறிந்திராத தொடு உணர்ச்சியில், அவளது கல்க்கம் நடுக்கமாக அவன் கையில் பிரதிபலிக்க வேண்டும்; ஏனெனில், அவளது பஞ்சன்ன விரல்களைத் தன்னுள் அடக்கியிருந்த மாதவனின் கைப்பிடி லேசாக இறுகி, அவளது மென்கரத்தை இதமாய் அழுத்தியது.

ஏதோ சுகமாய் உணர்ந்தவளுக்குத் திடுமென ஒன்று புரிந்தது.

அவளது கையில் இப்போது நடுக்கம் இல்லை!

மணமக்கள் பால் பழம் உண்டதும், உடை மாற்றி அப்போதே சற்று நேரத்தில் வரவேற்பையும், இன்னிசைக் கச்சேரியுடன் நடத்தினார்கள்.

''சித்ரா'' என்று சகஜமாய் அழைத்து, தன் பக்க நண்பர்களை மாதவன் அவளுக்கு அறிமுகம் செய்வித்தான். பெரும்பாலும் அவர்கள் எல்லோரும் மனைவியோடு வந்திருந்தார்கள். பரிசு கொடுத்ததோடு ''எங்கள் வீட்டுக்கு வரவேண்டும்'' என்ற அழைப்பும் விடுத்தார்கள்.

ஆனால், கைகுலுக்கி சிரித்துப் பேசியபோதும், பலரோடு அவன் மட்டும் பேசி முடித்து, யாரையாவது

அழைத்து விருந்து நடக்கும் இடத்துக்கு அழைத்துப் போகச் செய்தான்.

அவன் புறமிருந்து பெண் நண்பர்கள் என்று யாருமே வந்திராதபோதும், இருபாலாரும் சேர்ந்து படிக்கும் கல்லூரியில் படித்த சித்ரலேகாவுக்காக வந்தவர்களில் இருபாலாருமே இருந்தனர். அவர்களை அவள் அவனுக்கு அறிமுகம் செய்து வைத்தபோது மாறாத புன்முறுவலோடு அவர்களோடு மாதவன் பேசிப் பழகியது சித்ரலேகாவுக்குப் பெருமையாக இருந்தது.

"எல்லாம் கல்லூரியிலே மருமகளோடு சேர்ந்து படித்த பசங்கள். ஆணும் பெண்ணும் கலந்து படிக்கிற கல்லூரியிலே படிக்கிறாள் என்றபோது முதலில் கொஞ்சம் தயக்கமாய்த்தான் இருந்தது. ஆனால், எங்கள் சித்ரா தங்கமான பெண்; அவளைப் பற்றித் தப்பாக ஒரு பேச்சு வந்தது இல்லை என்று விசாரித்து தெரிந்துகொண்ட பிறகுதான் நிம்மதியாயிற்று. சாதகம் வேறு, பத்துப் பொருத்தமா? விடவும் மனதில்லை!'' என்று மாதவனுடைய தாயார் - இன்றிலிருந்து அவளுடைய மாமியார் கூறியது காதில் விழவும், சித்ரலேகாவுக்குக் கொஞ்சம் ஒரு மாதிரியாக, கொஞ்சம் மனதுக்குக் கஷ்டமாக இருந்தது.

ஓரக்கண்ணால், யாரும் அறியாதவாறு மாமியாரை அளவிட்டாள் மருமகள்.

மாமியார், மருமகளான தன்னைப் பற்றிய பெருமைதான் பேசுகிறார் என்பதை அறிய அதுவும் அவளுக்கு ஒருமாதிரியாகத் தான் இருந்தது.

என்னவோ இருபாலாரும் சேர்ந்து படிப்பது சேற்றுப் பள்ளம் போலவும், அதிசயமாய் அதில் உடம்பில் அழுக்கு படாமல் அவள் இருக்கிறாள் என்பதால், ஏதோ பரவா



யில்லை என்று வீட்டில் ஏற்றுக் கொண்டதுபோலவும் பேசுகிறார்களே!

ஆனால், இவர்கள் வேறு எப்படித்தான் இருக்கக்கூடும்?

கழுத்தில் நாலுபட்டைச் சங்கிலி. காதில் பெரிய வைரத் தோடு, கைநிறையத் தங்க வளையல்கள்...! நகைகளுக்குப் போட்டியாக, அவள் கட்டியிருந்த சேலையில்கூட அகல பார்டரும், முந்தானையுமாகச் சரிகை பளபளப்பாக இருந்தது.

கொஞ்சம் பட்டிக்காடுதான் போல. நம் அம்மா எல்லாம் கழுத்தில் ஒரு அட்டிகை தவிரக் கழுத்தில் வேறு நகை போட்டுப் பார்த்திருக்கிறாளா? அதுவே எவ்வளவு அழகாக, பாந்தமாக இருக்கும் என்று எண்ணமிட்டாள். தாயைக் காட்டிலும் மாமியார் பத்து ஆண்டுகளேனும் மூப்பாய் இருக்கக்கூடும் என்பது எல்லாம் ஒன்றும் மனதில் படவில்லை. இந்தப் பட்டிக்காடுகளோடு எப்படித்தான் வாழப் போகிறோமோ என்று அதுவே கவலையாக இருந்தது.

அவளுடைய அன்னையையே அளவுகோலாகக் கொண்டு பார்த்த சித்ரலேகாவுக்குப் புகுந்த வீட்டுப் பெண்கள் எல்லோருமே பட்டிக்காடுகளாகத்தான் தோன்றினர்.

எல்லோருமே இருக்கிற நகைகளை எல்லாம் அள்ளி அணிந்து கொண்டு அம்மன் போலத்தான் காட்சி அளித்தனர்.

அவர்களோடு ஒப்பிடும்போது, கல்யாணப் பெண்ணாக இருந்தும் சித்ரலேகா அவர்களதில் பாதி நகை அணியவில்லை!

அதுவும்கூட அவ்வப்போது விமரிசிக்கப்பட்டது.

மணப்பெண்ணின் அருகில் வந்து, கழுத்து கைகளை ஆராய்ந்துவிட்டு, 'மதினி' 'அக்கா' என்று அவரவர் உறவின்படி, சித்ராவுடைய மாமியார் அன்னபூரணியை விளித்து,'' நகைநட்டு ஒன்றும் போடவில்லையா? கழுத்தில் கையில் ஒன்றையும் காணவில்லையே? காதில் மட்டும் 'பாம்படம்' போலப் பெரிசாகப் போட்டு வைத்திருக்கிறது. தங்கம்தானே?'' என்று விசாரிக்கவும் சித்ரலேகாவின் முகம் சிவந்து போயிற்று.

இவள் காதில் விழுமே என்று மெல்லப் பேசும் நாகரீகம் கூட இல்லையே என்று உள்ளூரப் புகைந்தபோதும், கல்யாணப் பெண் என்பதாலும், சள்ளென்று பேசிப் பழக்கமற்ற காரணத்தாலும் உள்ளூரக் கனன்றபடி அசையாமல் நின்றாள் அவள்.

மாமியாரும் இப்படித்தான் பேசுவார்களா?

ஆனால், ''படித்த குடும்பம், பட்டணத்தில் இருப்பவர்கள் வேறு. நம்மைப்போல, அம்மன் மாதிரி அடுக்குவார்களா என்ன? நகையெல்லாம் அவளுக்கு நிறையத்தான். எல்லாம் செட், செட்டாக நாகரீகமாகச் செய்திருக்கிறார்கள்...'' என்று மருமகளைத் தாங்கிப் பேசவும் சித்ராவுக்கு மிகவும் ஆறுதலாக இருந்தது.

இதேபோல, இன்னொரு பேச்சும் அடிபட்டது.

''உங்க முதல் மருமகள் வீட்டிலேயே அடுத்த பெண்ணையும் எடுப்பதாக ரொம்ப நாளாக ஊரெல்லாம் பேச்சாக இருந்ததே, அண்ணி? ஏன் போகக்கென்று வேறே வெளியிடத்தில் பெண் பார்த்துவிட்டீர்கள்? அந்தப் பொண்ணு பிரேமா அவ்வளவு சரியில்லையா? அல்லது உங்க முதல்



மருமகளே குணம் போதாதோ?'' என்றெல்லாம் பிரேமாவைப் பற்றி விசாரித்தார்கள். வம்புக்கு அலைந்தார்கள்.

''எங்கள் மாலாவைப் பற்றிக் குறை சொன்னால் நாக்கு அழுகிவிடும். அப்படி ஒரு சாது அவள். பிரேமாவுக்கும் ஒரு குறையும் கிடையாது. கண்ணனுடைய அப்பாவுக்குத்தான் ஒரே வீட்டில் இரண்டு சம்பந்தம் பண்ண விருப்பம் இல்லை. 'அக்காவும் தங்கையும் அண்ணன் தம்பியை மணந்தால், அப்புறம், அவர்கள் அக்கா தங்கையாக இருக்க மாட்டார்கள்; ஓரகத்திகள் ஆகிவிடுவார்கள்' என்கிறார். ஒருவருக்கொருவர் பாசம் போய்விடுமாம். அவர் சொன்னால் அது சரியாக இருக்கும் என்பது உனக்கே தெரியும். அதனால்தான் அந்தப் பேச்சை விட்டுவிட்டோம்'' என்று அன்னபூரணி கூறவும் சித்ரலேகாவுக்கு மீண்டும் வியப்பு உண்டாயிற்று.

இந்த மாமியார், மூத்த மருமகளையும் தாங்கித்தான் பேசுகிறாள்! நல்லவள்தானோ?

ஆனால்... அவள் யார் இந்தப் பிரேமா? ரொம்ப நாளாக, அவளுக்கும் மாதவனுக்கும் முடிச்சிடுவதாக ஊரெல்லாம் பேச்சாமே!

ஊர் பேசுவது பற்றி அவளுக்கு அவ்வளவாக அக்கறை இல்லை. ஊர் பேசுகிறது என்றாலே, பொழுது போகாத சில வம்பர்கள், பொழுதைப் போக்குவதற்காகக் கட்டுகிற கதைதானே! எனவே ஊர் என்ன பேசினாலும் அவளுக்கு ஒன்றுமில்லைதான்.

ஆனால், மாதவனும் அந்தப் பிரேமாவும் அதுபற்றிப் பேசியது உண்டா?

இது தெரிந்தால் போதும் என்று, அவளது பேதை மனதின் ஒருகூறு தவிக்கலாயிற்று.

என்னவோ, 'நான் பிரேமாவைத்தான் மணப்பேன்' என்று மாதவன் இந்தத் திருமணத்தை எதிர்த்தது போலவும், அவன் தந்தை சுந்தரேசன், அதைக் காதிலேயே வாங்கிக் கொள்ளாமல், இந்தத் திருமணத்தை நடத்தி வைப்பது போலவும்கூட,ஒரு கற்பனை மனதில் எழுந்தது.

ஆனால், அப்படிக் கட்டாய மணத்திற்கு உட்படுகிறவன் போல மாதவன் தோற்றமளிக்கவில்லையே!

அல்லது, அவன் கைதேர்ந்த நடிகனாக இருக்க வேண்டும்!

அப்படி அவன் நடித்தால் அவளால் கண்டுகொள்ள முடியுமா?

யோசனையும் கலக்கமுமாக லேசாகத் திரும்பிக் கணவனைப் பார்த்தால், அவனும் அந்த நேரத்தில் அவளைத் தான் பார்த்துக் கொண்டிருந்தான்.

விழிகள் சந்திக்கவும், ஒற்றைப் புருவம் லேசாக ஏறி இறங்க, சங்கேதமாய் அவன் என்னவென்று கேட்கவும் சித்ரலேகாவின் கன்னங்களில் ரோஜாக்கள் பூத்தன.

வெட்கத்துடன் பார்வையை அவள் திருப்பிக் கொண்டபோது சற்றே வாடிய முகத்துடன் அவள் - அந்தப் பிரேமா சித்ரலேகாவின் கண்ணில் பட்டாள்.

## 2

கணவனிடமிருந்து நாணத்தோடு பார்வையைத் திருப்பிக் கொண்டபோது, சித்ரலேகாவின் உள்ளம், உற்சாக வானில் சிறகடித்துப் பறந்துகொண்டு இருந்தது.



அவள் முகத்தில் கலக்கத்தைக் கண்டதும், சுற்றிலும் அத்தனைபேர் கூட்டத்தில், அடுத்தவர் யாரும் அறியாதபடி, ஒரு சின்ன, புருவ அசைப்பிலேயே 'என்ன'வென்று அவளிடம் விசாரித்து விட்டானே!

பெரிய சாமர்த்தியசாலிதான் அவளுடைய கணவன்!

அதைவிட முக்கியமாய், அவளது உணர்ச்சிகளை அவ்வளவு துல்லியமாய அறிந்து கொண்டுவிட்டானே!

இத்தனைக்கும், அவள் ஒன்றும் முகத்திலேயே எல்லாவற்றையும் காட்டிக் கொண்டு இருக்கவில்லை! வீடியோ போட்டோ என்று எதிலாவது விழுந்து தொலைந்து விடுமே என்று, இழுத்துப் பிடித்த முறுவலோடு கவனமாகத்தான் இருந்தாள்.

கண்களில் மட்டும்தான் சிறு கலக்கம் தென்பட்டு இருந்திருக்கக்கூடும். அதைக் கூட வினாடியில் கண்டுபிடித்து, விசாரித்தான் என்றால் அவளிடம் அவன் எவ்வளவு அன்பு கொண்டிருக்க வேண்டும்.

இது புரியாமல் கலங்கித் தவித்தாளே! என்ன மடத்தனம்!

இப்போது என்னவென்று கேட்டவனுக்குப் பதில் தரவேண்டுமே!

அவனைப் போலவே, ஒரு சின்ன அசைவின் மூலம் - ஒரு சிறு தலையசைப்பின் மூலமாய் 'ஒன்றுமில்லை' என்பது போலக் காட்டிவிட்டு, வெட்கமும் மகிழ்ச்சியுமாக சித்ரா பார்வையை விலக்கி வேறுபுறம் பார்த்தபோது, அந்தத் திருமணக்கோலாகலத்துக்கு மாறுபட்டதாய், சற்று வாடிய முகம் ஒன்றை அவள் காண நேர்ந்தது.

பார்த்ததுமே, அவள்தான் அந்த பிரேமா என்பது சித்ரலேகாவுக்குப் புரிந்துவிட்டது. புரிந்த மறுகணம் அவள் மனம் அந்தப் பெண் பிரேமாவை -ஊளவெரிக்கும் விட்டது.

சித்ரலேகாவின் வயதுதான் அவளுக்கும் இருக்கக் கூடும். இவள் கொஞ்சம் ஒல்லிவாகு என்றால், அவளது உடல் அமைப்பு கனகச்சிதமாய் இருந்தது. நிறைய உடல் பயிற்சிகள் செய்திருப்பாள் என்று எண்ணினாள் சித்ரா.

கிட்டத்தட்ட இருவருமே ஒரே நிறம்தான். உயரம்கூட ஒன்றாய்த்தான் இருக்கும் என்று தோன்றியது. கூந்தலைக் கூட இவள் போலவே அவளும் இடையளவில் வெட்டி விட்டிருந்தது போலவே தோன்றியது. முக அமைப்பிலும் குறை சொல்ல ஒன்றும் இல்லை.

அவள் அணிந்திருந்த அணிமணிகள், ஆடையைப் பார்க்கும்போது வளத்திலும் குறைபட்டவளாகத் தோன்ற வில்லை.

அப்படிக் குறைவாக இருந்திருந்தால், இந்தக் குடும்பத் தில் அந்தப் பிரேமாவின் தமக்கை மாலதி வாழ்க்கைப் பட்டிருக்க முடியாதே!

யோசித்துப் பார்க்கும்போது, மாலதியின் தங்கையா கப் பிறந்த ஒரு பிழைக்காக மட்டுமே, மாதவனுடைய மனைவியாகும் வாய்ப்பு பிரேமாவுக்கு மறுக்கப்பட்டிருப்ப தாகத் தோன்றவே, சித்ரலேகாவுக்கு அவளிடம் பரிதாபம் உண்டாயிற்று.

ஓரக்கண்ணால் கணவனை நோக்கியவளுக்கு, செதுக் கிய சிலை போன்ற அவனது முக அமைப்பும், உயரமும், கம்பீரமான தோற்றமும் கண்டு, பெருமிதமாய் உணர்ந்த போதே அந்தப் பிரேமாவுக்கு, தன் பிழை என்று எதுவு மின்றி இவனை இழக்க நேர்ந்தது எவ்வளவு வேதனையாக இருந்திருக்கும் என்றும் தோன்றியது.

ரொம்பவும் ஆசைப்பட்டிருப்பாளோ? பாவம்!



சித்ரலேகா இரக்கப்பட்டுக்கொண்டு இருந்தபோதே அந்தப் பிரேமா, அவளை நோக்கி வரவும் கொஞ்சம் திகைத்தாள்.

இவள் வந்து என்ன பேசுவாள்? எப்படிப் பேசுவாள்? அவள் மனம் நோகாமல், என்ன பதில் சொல்வது?

இவள் யோசித்து முடிக்குமுன், அருகில் வந்துவிட்ட பிரேமா, ''வாழ்த்துக்கள், சித்ரலேகா! வாழ்த்துக்கள் சின்ன அத்தான்!'' என்று இருவரையும் வாழ்த்தினாள்.

அவளிடம் புன்னகையோடு நன்றியுரைத்துவிட்டு, மனைவியிடம் திரும்பி, ''எங்கள் அண்ணியுடைய தங்கை. பெயர் பிரேமா'' என்று அறிமுகம் செய்து வைத்தான் மாதவன்.

சற்று சுருக்கமான அறிமுகமோ? இவன் மனதிலும் ஏக்கம் இருந்து அதை மறைத்துப் பேசுகிறானோ?

சேச்சே, அப்படியெல்லாம் இராது என்று தனக்குத் தானே கூறியபடி, பிரேமாவிடம் சினேகமாய் முறுவலித் தாள். சித்ரலேகா அந்த முறுவலுடனேயே, வாழ்த்துக்கு நன்றியும் தெரிவித்தாள்.

அதற்குள் மாதவன் பக்கம் யாரோ தொழில்ரீதியில் தெரிந்தவர்கள் வந்து கைகுலுக்க, அவன் அவர்கள்புறம் திரும்பி நின்று அவர்களோடு பேசத் தொடங்கினான்.

பிரேமா, சித்ரலேகாவின் பக்கவாட்டில் ஒதுங்கி, அவ ளது கையைப் பற்றி, ''நீங்கள் என்னுடன் பேசுவீர்களோ, மாட்டீர்களோ என்று ரொம்பவும் கவலைப்பட்டுக் கொண் டிருந்தேன், சித்ரலேகா!'' என்று விழிகளில் சிறுநீர்த்திரையு டன் இயம்பினாள்.

''நான் ஏன்... ஏன்... அப்படிச் சொல்கிறீர்கள்?'' என்று சிறு தடுமாற்றத்துடன் சித்ரலேகா வினவினாள்.

லேசாகத் தோளைக் குலுக்கினாள் பிரேமா. "அதுதான்
நம் உறவில் வம்பு பேசுவதற்கென்றே பெரிய பட்டாளமே
இருக்கிறதே. இவ்வளவு நேரத்தில் ஒருவர்கூடவா என்
னைப் பற்றி அவசியில்லை என்கிறீர்கள்? நிச்சயமாய்ச்
செய்திருப்பார்கள். அதுதான் உங்கள் முகமே சொல்லுகி
றதே!" என்றாள் சிறு வருத்தத்துடன்.

இவளைப் பற்றி பேச்சுகள் நினைவுவர, இவளுக்கு
என்ன விளக்கம் தருவது என்று புரியாமல் முதலில்
சித்ரலேகா சற்றுத் திணறினாள்.

ஒருவாறு சமாளித்து, "எந்த மாதிரிக் குடும்பங்கள்
என்றாலும், ஊர்வம்பு பேசி, ஒருவருக்கொருவர் கலகமூட்
டிப் பார்த்து மகிழ என்று சிலபேர் இருக்கத்தான் செய்வார்
கள். வாழ்க்கையில் நிறைவு அடையாதவர்கள் இந்த மாதி
ரிச் சில்லுண்டித்தனத்தில் ஈடுபடுவார்கள் என்று படித்திருக்
கிறேன். அதனால் இதுபோலப் பேச்சுகளை நான் பொருட்ப
டுத்துவதில்லை" என்று பெரிய அனுபவ ஞானி போல
கெத்தாகச் சொல்லி முடித்தாள் சித்ரலேகா.

விடாமல் பற்றியிருந்த கையை லேசாக அழுத்தி,
"ரொம்பவும் நன்றி, சித்ரலேகா. இவர்கள் பேச்சையெல்
லாம் கேட்டு எங்கே என்னை வெறுத்தேவிட்டீர்களோ
என்று எனக்கு ரொம்பவும் கவலையாக இருந்தது. நல்ல
வேளை! நீங்கள் நல்ல அறிவாளியாக இருந்ததால் தப்பித்
தேன்! எப்படியும் நான் என் அக்கா வீட்டுக்கு அடிக்கடி
வருவேன்; நீங்களும் அங்கே இருப்பீர்கள். இரண்டு பேரும்
முகம் திருப்பிக் கொண்டு போவதைவிடத் தோழமையோடு
பழகினால்தானே நன்றாக இருக்கும்; சொல்லுங்கள்." என்
றாள் மற்றவள்.

தன்னுடைய விருப்பு வெறுப்புகளுக்கு அடுத்தவள்,
ஒருத்தி இவ்வளவு மதிப்புக் கொடுக்கிறாள் என்பதில்



சித்ரலேகாவுக்கு உச்சி குளிர்ந்து போயிற்று. கெட்டிக்காரத்த
னமாகப் பேசுவதாக எண்ணி, "தோழமை என்று சொல்லி
விட்டு, 'ங்கள்' போட்டுப் பேசுகிறீர்களே!" என்று சிறு
சிரிப்புடன் வினவினாள்.

"அது சரி!" என்று நாட்டிய பாவனையில் அழகாகத்
தலையசைத்துவிட்டு, "என்னைச் சொல்லிவிட்டு அங்கே
மட்டும் 'கிறீர்களா?' என்று பிரேமா மடக்கவும், இரு
பெண்களுமே கலகல என்று நகைத்து, தங்கள் நட்பை உறுதி
செய்து கொண்டனர்.

ஆச்சரியமாய்த் திரும்பிப் பார்த்தான் மாதவன்.
அவன் கண்ணில் சிறு எச்சரிக்கையும் இருக்கவே, சிறுமுகக்
கன்றலுடன் சித்ரலேகாவின் சிரிப்பு நின்றுபோயிற்று.

"ரொம்பத்தான் முறைக்காதீர்கள், சின்னத்தான்.
கொஞ்சம் சிரித்துவிட்டதால், சித்ரா ஒன்றும் உங்கள் மனு
தர்ம சாஸ்திரங்கள் எதையும் மீறிவிடவில்லை" என்று
பிரேமா தன் புதிய தோழிக்காகப் பரிந்துகொண்டு வரவும்,
புதுப்பெண்ணின் கலக்கத்துடன் நின்ற சித்ரலேகா நன்றியு
டன் புதிய தோழியை நோக்கினாள்.

லேசாகத் தலையசைத்து, "அம்மாவுக்குப் பிடிக்காதே
என்று தான்..." சொல்லிக் கொண்டு இருக்கும்போதே
அன்னபூரணி அங்கே வந்துவிட்டாள்.

"நீயாம்மா, அப்படி உரக்கச் சிரித்தது? இனி அப்படிச்
சிரிக்காதே! பார்க்கிறவர்கள் தப்பாக நினைத்துக் கொள்வார்
கள். குடும்பத்துப் பெண்கள் அடக்கமும் அமரிக்கையுமாக
இருக்க வேண்டும். வீட்டுக்குள் எப்படியிருந்தாலும்,
வெளியே நாலு பேர் கூடுகிற இடத்தில் ரொம்பவும்
கவனமாக இருக்கப் பழகிக்கொள்" என்றவள், பிரேமாவி
டம் திரும்பி, "என்னம்மா, நம் வீட்டுப் பழக்கம் உனக்குக்
கூடவா தெரியாது? கற்றுக் கொடுக்காமல், கூடச் சேர்ந்து

சிரிக்கிறாயே!'' என்று கண்டிப்புடன் வேகமாக உரைத்து விட்டு, வாயிற்புறம் யாரோ கிளம்புவதைக் கண்டு அவர்களுக்கு வெற்றிலை பாக்குப் பை கொடுப்பதற்காக விரைந்து சென்றாள்.

'உப்' என்று பெரிதாக, பிரேமா மூச்சுவிட, ''அத்தகாகத்தான் பார்த்தேன். வெறும் எச்சரிப்பாக. என்னமோ அநியாயமாய் முறைத்ததாக என்மேல் பாய்ந்தாயே!'' என்று பிரேமாவிடம் கூறிவிட்டு, மனைவியிடம்,''இது சென்னை இல்லை, சித்ரா. திருச்சியும் ஒன்றும் கிராமம் இல்லை என்றாலும், நம் உறவென்று இங்கு வந்திருப்பவர்கள் கொஞ்சம் பழமைவாதிகள்தான். கூடவே, கொஞ்சம் அடக்க ஒடுக்கமாக நடந்து கொண்டால் அம்மாவுக்கும் பிடிக்கும்'' என்றான் மாதவன்.

சிரிப்பதுகூடக் குற்றமா? ஒரே காட்டு தர்பாராக இருக்கிறதே என்று குமுறியபோதும், எதையும் வெளிக்காட்டத் துணிவின்றிப் பேசாமல் நின்றாள் சித்ரலேகா.

லேசாகக் கண்ணடித்து,''அத்தை பழமைவாதி என்பதைச் சின்ன அத்தான் எவ்வளவு நாசுக்காகச் சொல்கிறார் பார்த்தாயா?'' என்று கிளம்பிவிட்டாள் பிரேமா.

சித்ராவுக்கும் உள்ளூர அதே எண்ணமே இருந்தது. கூடவே, அந்தப் பழைய காலத்து அல்லி அரசாணியின் ஆணைகளைக் கணவன் தலைமேல் கொண்டு ஆடுவானோ என்ற கவலையும் தோன்றியது. பேசாமல் பத்தாவதோடு படிப்பை நிறுத்தியிருக்கலாம். பட்டப்படிப்புவரை படிக்க வைத்துவிட்டு, இப்படி ஒரு பட்டிக்காட்டார்களிடம் கொண்டு தள்ளிவிட்டார்களே என்று அவள் மனம் குமைந்தது.

ஆனால், அந்தக் குமைச்சல் எல்லாம் வெகு விரைவிலேயே மறைந்து போயிற்று. இரவெல்லாம் கனிவும் காத



லும் காட்டிய கணவனின் அணைப்பில் அவளுக்கு அவளைச் சூழ இருந்த மற்ற உலகம் மறந்தே போயிற்று. அவனது மகிழ்ச்சிக்காக, எந்தவிதத் தியாகம் செய்யவும், எந்தவிதத் துன்பத்தைச் சகிக்கவும் அவள் தயாரானாள் - அவனுடைய தாயாரின் அல்லி தர்பாருக்கு அடிபணிவது உட்பட.

அன்று அவன் அவளுக்குப் பல பரிசுகள் கொடுத்தான். திருமணம் நிச்சயம் ஆனதிலிருந்து சேர்த்தானாம்!

கூந்தலில் அணிவதற்கு விதவிதமான 'பின்'கள் பாண்டுகள், கொலுசு என்று பல.

இரண்டு சரிதார் செட்டையும், சில பிளாஸ்டிக் காதணி, வளையல்களைக் கொடுத்து,''அம்மாவுக்குப் பிடிக்காது. அதனால் நம் அறைக்குள் மட்டுமாக, அல்லது நாம் இருவருமாக எங்கேனும் வெளியூர் செல்லும்போது அணிந்து கொள்'' என்றான்.

'என்ன? உடையணிவது நான்! இதில் அவர்கள் என்ன அபிப்பிராயம் சொல்வது?' என்று கேட்க அப்போது அவளுக்குத் தோன்றவில்லை.

அவன் ஒவ்வொன்றாகக் காட்ட காட்ட, நம் கணவன் நமக்கு வாங்கித் தருகிறார் என்ற மகிழ்ச்சி ஒருபக்கம் நீரூற்றாய்ப் பொங்கியபோதும், அவளுக்கு உள்ளூர மனம் கூசவும் செய்தது.

மாதவன் ஆசையாக வாங்கிச் சேர்க்கச் சேர்க்க 'இவள் எனக்கு மாப்பிள்ளையைக் காட்டவில்லை; விவரம் தெரிவித்து என்னிடம் அபிப்பிராயமோ சம்மதமோ கேட்கவில்லை' என்று குற்றப்பத்திரிகை அல்லவோ படித்துக் கொண்டு இருந்தாள்!

ஆனால், மாதவனும் அவளை ஒருமுறைதானே பார்த்திருக்கிறான்?

மெல்லக் கேட்டபோது, "உன் போட்டோவைப் பார்த்தபோதே இவள்தான் மனைவி என்று எண்ணி இதையெல்லாம் வாங்கி வைக்கத் தொடங்கி விட்டேன், தெரியுமா? அந்தப்படம், நீ காதோரமாய்க் கூந்தல் சுருளை ஒதுக்குவது போல எடுத்தபடம். அதில் உன் விரல்களைப் பார்த்தேனா? மறுநாளே இந்த நகச் சாயம் செட்டை வாங்கி வைத்தேன்" என்று கூறி அவளை அசத்தினான் கணவன்.

கூடவே, "என் படத்தைப் பார்த்ததும் உனக்கு எப்படி இருந்தது? என்ன நினைத்தாய்?" என்று அவன் தொடர்ந்து கேட்கவும் சித்ரலேகா வெகுவாகத் திண்டாடிப் போனாள்.

வீட்டில் மாதவன் படத்தை அவளிடம் காட்டியபோது, வருங்காலக் கணவன் என்று முடித்துவிட்டல்லவா காட்டினார்கள்! அந்தக் கோபத்தில் இருந்தவள் முதலில் படத்தை சரியாகப் பார்க்கவே இல்லையே!

கொஞ்சம் சமாதானப் பட்டபிறகுதான் படத்தைப் பார்த்தாள். அப்படிப் பார்த்தபோது, குணம் எப்படி இருந்தாலும், ஆள் நன்றாகத்தான் இருக்கிறார் என்று எண்ணியது நினைவு வந்தது. கூடவே சோளக்கொல்லை பொம்மை மாதிரி ஆள் நன்றாக இருந்தால் போதுமாக்கும் என்று எண்ணியதுகூட நினைவு வரவே அவள் முகம் சிவந்து போயிற்று.

இதையெல்லாம் என்னவென்று அவனிடம் சித்ரலேகா விளக்குவாள்?

"படத்தில் ந... ந... நன்றாக..." என்று அவள் திக்கித் திணறவும், அவன் வேறாக நினைத்து நகைத்தான்.



'நான் உன் கணவன். என்னிடம் இன்னுமுமா வெட்கம்? ஆண்களோடு சேர்ந்து படித்தவள், பேச இப்படித் தயங்குகிறாயே!" என்று அவன் கொஞ்சலாகக் கூறவும் அப்பாடி என்று இருந்தது அவளுக்கு.

கூடவே, குற்றமனமும் குறுகுறுக்கவே, "வந்து... நான்... உ... உங்களுக்கு ஒன்றுமே வா... வாங்கவில்லை. சா... சாரி..." என்று மன்னிப்பை வேண்டும் குரலில் ஒருவாறு கூறி முடித்தாள்.

"அப்படியெல்லாம் நான் உன்னிடம் எதையும் எதிர்பார்க்கவில்லை, சித்ரு. என்னதான் கல்லூரியில் படித்தாலும், என்னைப் போல நீ தனியாக வெளியே சென்று இப்படி வாங்குவது உன்னால் முடியாது என்று எனக்குத் தெரியாதா என்ன?" என்று கனிவாகப் பேசினான் கணவன்.

ஏன் முடியாது? கல்லூரிக்குத் தனியாகப் போய்விடுகிறபோது, கடைக்குத் தனியாகப் போக முடியாதா? என்று கேட்கத் தோன்றியது அவளுக்கு. ஆனால் மாதவன் அவளால் வாங்க முடியாததையே ஒரு பெருமை போலப் பேசவும், அதை உடைக்க மனம் வராமல், பேசாமல் இருந்து விட்டாள் அவள்.

கடைசியாக மாதவன் அவளுக்காக வாங்கி வைத்திருந்ததைக் காணவும் அவள் பிரமித்துப் போனாள்.

ஆனால், அந்தப் பரிசு அவளது வாழ்வையே நாசமாக்கப் போகிறது என்பது பாவம், அப்போது அவளுக்குத் தெரியாது!

## 3

மாதவன், அவனுடைய மனைவியிடம், அவனது பரிசு சேகரிப்புகளில், கடைசியாகக் காட்டியது ஒரு சேலை. சேலையென்றால் சாதாரணச் சேலை அல்ல. ராஜஸ்தான் சரிகை வேலைப்பாடு செய்த சேலை. ஆரஞ்சும் ரோஜாநிறமும் கலந்த வண்ணத்தில் சேலை முழுவதுமாய், கொடியும் இலைகளும், பிஞ்சுமாய் சரிகை வேலைப்பாடு மிகவும் சிறப்பாக இருந்தது.

சேலையின் அமைப்பில் ஒன்றை உணர்ந்து, ''இது... இந்தச் சேலை... கல்யாண சேலை மாதிரி...'' என்று இழுத்தாள் சித்ரலேகா.

''ஆமாம்'' என்று முறுவலித்தான் அவன். ''அங்கே ராஜஸ்தானில் நம் 'சப்ளையர்' வீட்டில் ஒரு திருமணம். மணப்பெண்ணுக்கு வீட்டிலேயே இந்த சரிகை வேலை செய்துகொண்டு இருந்தார்கள். நம் திருமணம் நிச்சயமாகி இருந்ததா? உனக்கும் ஒன்று, சரிகை கொஞ்சம் குறைவாக, ஆனால் அதேவிதமாக வேலைப்பாடு செய்துதரக் கேட்டேன். தொழில் வகையில் நாம் அவர்களிடம் நிறைய வாங்குவதோடு, அந்த வீட்டுப் பையன் என் சிநேகிதனும் கூட. எனவே கேட்ட மாதிரியில் வேலைப்பாடு செய்து தந்தார்கள். இந்தக் கொடி, இலை, பூ, பழத்திற்கெல்லாம் அர்த்தம் உண்டு. திருமணம், பிள்ளைகுட்டி, அது இது என்று...'' என்று அவள் கணவன் குறும்புப் பார்வையுடன் நகைக்க, அவள் வெட்கித் தலைகுனிந்தாள்.

மறுவீடு, சம்பந்திகளின் எதிர்மரியாதைகள், புதுமணத் தம்பதிகளுக்கு விருந்து என்று ஒரு திருமணத்தை ஒட்டிய



அத்தனை சம்பிரதாயங்களும் முடிந்து மாதவனும் சித்ரலேகாவும் இயல்பான வாழ்க்கை தொடங்க, கிட்டத்தட்ட ஒரு மாதம் பிடித்தது.

புதிதாக யாராவது வீட்டுக்கு வந்தால், 'அய்யோ! இன்னும் ஒரு விருந்தா?' என்று அஞ்சும் அளவு விருந்து உபசாரங்கள் எல்லாம் நடைபெற்றன.

இத்தனை ஆரவாரத்துக்கும் இடையே, தேனிலவைப் பற்றிய பேச்சையே காணோமே... என்று தனக்குள்ளேயே சில நாட்கள் யோசித்துவிட்டு, ஒருநாள் இரவில் கணவனிடம் அதுபற்றி சித்ரலேகா விசாரித்தாள்.

''நாம் இருவரும் வாழும் காலம் முழுவதுமே, நமக்குத் தேனிலவுதானே, கண்ணே!'' என்று வசனம் பேசிவிட்டு, அவன் அதை நிரூபிக்கத் தொடங்கவும், அப்போதைக்குத் தேனிலவைப் பற்றிய நினைவு அவளுக்கு அடியோடு மறந்துபோயிற்று.

ஆனால், மீண்டும் அதே யோசனை மனதைக் குடையவும், மீண்டும் கணவனிடம் கேட்டாள் அவள்.

''அதுதான் உன் பெற்றோர் வீட்டுக்குப் போய் ஒருவாரம் இருந்துவிட்டு வந்தோமே, சித்துகுட்டி; அதையே தேனிலவாய் நினைத்துக்கொள்'' என்று அவன் கூறியதை அவளால் ஒத்துக்கொள்ள முடியவில்லை.

வேலை, உறவு, நட்பு என்று எந்தவிதக் குறுக்கீடும் இல்லாமல், கணவனும் மனைவியும் மட்டுமாகத் தனித்திருந்தது, ஒருவரை ஒருவர் அறிந்து கொள்ளத்தானே தேனிலவு என்று செல்வது?

அங்கே, சித்ரலேகாவின் பிறந்த வீட்டில், மக்களுக்குப் புத்தி சொல்லவே அம்மாவுக்கு நேரம் போதவில்லை.

அப்புறம், வாழ்த்த வந்த அவளுடைய சிநேகிதப் பட்டாளங்கள், அம்மா அப்பாவின் நட்பினர் வருகை.

அத்தோடு கூட, சித்தி, மாமா வீட்டு விருந்துகளும் உபசாரங்களும்.

"தேனியின் தரிசனமே கிடைக்கவில்லையே?" என்று மாதவனே கேட்கும்படியாக இருந்த அந்த ஒரு வாரத்தைத் தேனிலவாக எப்படி நினைத்துக் கொள்ள முடியும்?

நேரமும், தனிமையும் கிடைத்தபோது, மீண்டும் மாதவனிடம் கேட்டாள்.

சில வினாடி பேசாதிருந்துவிட்டு, "தேனிலவு என்பது நம் நாட்டின் பழக்கமே அல்லடா. நானும் என் மனைவியும், உங்கள் எல்லோரையும் விட்டுத் தனியாகச் சில நாட்கள் இருந்து விட்டு வருகிறோம் என்று அம்மா அப்பாவிடம் போய்ச் சொல்ல முடியாதும்மா. பார், அண்ணன் அப்படிப் போகவில்லை. கூட்டுக் குடும்பத்தில், எனக்கு மட்டும் தனிச் சலுகை வேண்டும் என்று கேட்பது சரியில்லை, சித்ரா" என்று முடித்துவிட்டான் மாதவன்.

"அதனால்தான் தனிக்குடித்தனம் மேல் என்று பலர் சொல்கிறார்கள் போல" என்று யோசியாமல் அவள் வாய் விட்டுச் சொல்லிவிட, மாதவனின் முகமே மாறிவிட்டது.

"அப்படி யார் சொல்லியிருந்தாலும், அவர்கள் முழு முட்டாள்கள். அந்த முட்டாள்களின் கூட்டத்தில் நீ, ஒருத்தியாகிவிடக் கூடாது. இதை எப்போதும் நினைவில் வைத்திரு" என்று ஒரு மாதிரிக் குரலில் மாதவன் கூறவும் சித்ரலேகாவுக்கு வெலவெலத்துவிட்டது.

அவள் குடும்பத்தைப் பிரிக்க முயற்சிப்பதாக மாதவன் எண்ணிவிட்டான் போலத் தெரிகிறதே!



"நான்... நான் ஒன்றும் அப்படி... அந்த மாதிரி எண்ணமே எனக்குக் கிடையாது... சு... சும்மா ஒரு பேச்சுக்குச் சொன்னால் நீங்கள் அதற்குள்..." என்பதற்குள் அவளுக்குக் குரல் கம்மி, விழிகளில் நீர் கோர்த்துவிட்டது.

சில கணங்கள் அவளையே பார்த்துக் கொண்டு நின்றவன், சட்டென அவளை இழுத்து அணைத்தான்.

ஆதரவாய் முதுகை வருடி, "உன்மேல் நான் கோபப்படுவேனா, கண்மணி? எந்தக் குடும்பத்தையும் கெடுப்பதற்கு என்று சிலபேர் இருக்கிறார்கள். அவர்களின் பேச்சுக்கு நீ ஒரு நாளும் செவிசாய்த்து விடக்கூடாது என்று எச்சரித்தேன். அவ்வளவுதான். இதற்குப்போய் அழுவார்களா... ம்...?" என்று கொஞ்சிக் குலவி அவளைத் தேற்றினான்.

வினாடிக்குள் அவனுக்குக் கோபம் வந்துவிட்டதே. இவள் குடும்பத்தைப் பிரிப்பாளா; மாட்டாளே என்கிற திடம் இல்லையே! அவளுக்கும்தான், மாதவனின் கொள்கைகள் என்ன, எதெதற்கு அவன் கோபப்படுவான் என்று தெரியாது போயிற்றே!

இதுபோலத் தப்பு அபிப்பிராயங்களைப் போக்கி, இருவரும் ஒருவரை ஒருவர் அறிந்து கொள்ளத்தானே தேனிலவு! அதைக் கேட்டால் அவனுக்குப் பிடிக்கவில்லையே!

உள்ளூரத் தேனிலவு போகாத வருத்தம் இருந்தபோதும், அன்றைய அவனது கோபத்தின் பிறகு அதுபற்றிச் சித்ரலேகா பேச்செடுக்கவே இல்லை.

அத்தோடு, அந்தக் கோபமே வெறும் கனவு போலக் 'கண்ணே, மணியே' என்று அறையின் தனிமையில் அவன் காட்டிய அன்பில், அவளது அந்த வருத்தமும் வெகு விரைவிலேயே மறைந்து போயிற்று.

இந்த ஒரு மாத காலத்தில், சித்ரலேகா, தனக்குள் சில பல பிழைதிருத்தங்கள் செய்து கொள்ள நேர்ந்தது.

முதலாவது திருத்தம், அவளுடைய மாமியாரைப் பற்றியது.

அல்லிராணி, எல்லோரையும் அதிகாரம் செய்து, அடக்கி ஆள்பவள் என்று மாமியாருக்குச் சித்ரலேகா குத்தியிருந்த முத்திரையை விரைவிலேயே மாற்றிவிட்டாள்.

சற்று அதட்டியே பேசுகிற பாணி என்றாலும், மாமியாரிடம் சூது, வாது, வினை என்று எதுவும் கிடையாது என்பதை அவள் விரைவிலேயே கண்டு கொண்டாள்.

மூத்த மருமகள் மாலதி, மாமியார் எது சொன்னாலும் அலுப்பிசகாமல் அப்படியே செய்வதைக் கண்டு முதலில் வியந்த சித்ரலேகா, விரைவிலேயே, தானும் அதுபோலவே செய்யத் தொடங்கினாள்.

"முதலில் மரியாதையாக இந்தப் பாலை எடுத்துக் குடித்துவிட்டு வேறு வேலை பார்!" என்று மாமியார் விரட்டுவது, அவளது உடல் நலம் பேணுவதற்காகவே அல்லவா?

மருமகள்கள் - அவளும்தான். ஒருகாலத்தில் மருமகளாக வந்தவள்தானே - வீட்டை விட்டு வெளியே, தனியாக ஓர் அடி எடுத்து வைத்தால் பிடிக்காது. காரணம், சில ஆண்டுக்கு முன் அந்தத் தெருவில், மாருதியில் வந்து ஒரு பெண்ணின் தாலியை அறுத்துக் கொண்டு போய்விட்டார்களாம்!

பத்து பவுன் சங்கிலி போனாலும் பரவாயில்லை. அம்மையப்பனை அல்லவோ தாலியாகக் கோத்து வைத்திருக்கிறது? அது பறிபோய்விட்டால்? வெளியே போவதா



னால் காரில் அவளவள் புருசனோடு போங்கள். இல்லாவிட்டால் பேசாமல் வீட்டுக்குள்ளேயே கிடங்கள்!" எனும் போது எப்படிக் குறைகூற முடியும்?

அதுவும், ஒற்றை வரிசையில் இரண்டு இலட்சம் பெறுமான வைரமாலை ஒன்றைக் கொணர்ந்து "வெள்ளிக்கிழமை அணிந்து கொள். மாலதிக்குப் போட்ட மாதிரி செய்யச் சொல்லியிருந்தேன். கல்யாணம் சட்டுப்புட்டென்று நடந்ததால், மாலை இப்போதுதான் ரெடியாயிற்று" என்று அவள் கழுத்தில் அணிவித்து, "நன்றாயிருக்கிறது" என்று மெய்யாகவே மகிழ்கிறவளிடம்.

பிரமோ, 'அடிக்கடி வருவேன்' என்றதில் கூட ஒரு திருத்தம் இருந்தது. அவளுக்கு அதிசயமாய் நினைவு வந்து எப்போதாவது ஒருமுறை தஞ்சை வரை சென்று, அங்கிருந்த அவளுடைய பெற்றோரைப் பார்த்து வந்தாளே தவிர, அவளது வாசம் எப்போதும் அக்காவின் வீட்டில் தான்.

அதை அந்த வீட்டில் யாரும் பொருட்படுத்தியதாகவும் தெரியவில்லை.

"பிரேமாவுக்கு அவள் அக்காமேல் அதிகப் பிரியம். அங்கேயும் இரண்டு பெண்கள். மாலதி இல்லாமல் அவளுக்குப் பொழுது போகவில்லையாம். முன்னெல்லாம் சனி, ஞாயிறு என்றால் இங்கே ஓடி ஓடி வருவாள். பிறகு, இங்கேயே கல்லூரியில் சேர்ந்தாளா, நம் வீடு இருக்க எதற்கு விடுதியில் விடவேண்டும்; இங்கேயே இருந்து படிக்கட்டும் என்று விட்டேன். அக்கா வீடு என்றால் என்ன? அம்மா வீடு என்றால் என்ன? எல்லாம் சொந்த வீடுதானே?" என்று சொன்ன மாமியார், சித்ரலேகாவுக்கு மலையளவாய் உயர்ந்து தோன்றினாள்.

ஆனால், இந்த ஏற்பாட்டின் மூலம் பிரேமாவுக்கு ஒரு கெடுதல் நேர்ந்திருப்பதை அன்னபூரணி அறியாவிட்டாலும், சித்ரலேகாவால் ஊகிக்க முடிந்தது.

அன்னபூரணி, தன் இயல்பான பெருந்தன்மையோடு தன் வீட்டில் அவளுக்கு இடம் கொடுத்தாள் என்று புரிந்து கொள்ளாமல், வருங்காலச் சின்ன மருமகளாக அவளை அங்கீகரித்து விட்டதாக எண்ணி விட்டாள். மாதவனின் கம்பீரமான தோற்றமும் நடவடிக்கைகளும் அந்த எண்ணத்திற்கு உரமிட்டு வளர்த்துவிட்டன.

ஒரு மகள் திருப்தியோடு வாழ்வதை அறிந்த மாலதியுடைய பெற்றோருக்கு, அடுத்த பெண்ணுக்கும் அதுவே வாய்க்க வேண்டும் என்று விரும்பி, அப்படியே பேசவும் தொடங்கியிருக்கக் கூடும்.

அவர்கள் பேச்சு, வெளியேயும் பரவி இருக்க வேண்டும் என்று சித்ரலேகா ஊகித்தாள்.

ஒருநாள் பகலில், மாலதியோடு பேசிக் கொண்டிருந்த போது அவளும் அதையே சொன்னாள்.

''அப்பா அம்மாவுக்கு ஆசை - பிரேமியையும் இந்த வீட்டிலேயே கொடுக்க வேண்டும் என்று. அதற்காகத்தான் அத்தை அவளை இங்கேயே தங்கச் சொல்லி விட்டார்கள் என்று நினைத்தார்கள். அத்தையின் பெரிய மனதை எண்ணி, அடுத்த பெண்ணையும் இங்கேயே கொடுக்க விரும்பியவர்கள், பிரேமி இங்கே தங்க இடம் கொடுப்பதற்கும் அந்தத் தாராள மனப்பான்மையே காரணமாக இருக்கக் கூடும் என்று யோசிக்க மறந்து விட்டார்கள். நான் அதை எடுத்துச் சொன்னபோது என் மீதே கோபப்பட்டார்கள்... இப்போது வீண் வருத்தம்... ஊரெல்லாம் துக்கம் விசாரிக்கிற மாதிரிப் பேசுகிறார்களே என்று அழுகிறார்கள்...



ஆனால், சொல்லச் சொல்லக் கேட்காமல் இப்படி என்று ஊரெல்லாம் பரப்பியது இவர்கள்தானே?'' என்றாள் அவள் கோபமும் வருத்தமுமாக.

''ம்... அன்றைக்கு, வரவேற்பின் போது, அத்தையிடம் கூட சிலபேர் இதுபற்றி விசாரித்தார்கள், அக்கா'' என்றாள் சித்ரலேகா. ''என் காதிலும் விழுந்தது.''

''விழாமல் எப்படிப் போகும்? உன் காதில் விழவேண்டும் என்பதற்காகத்தானே அந்த விசாரிப்பே! ஆனால் அத்தை ஒருவரையும் விட்டுக் கொடுக்காமல் பதில் கூறியிருப்பார்களே? மாமா, பிரேமா, என் பெற்றோர்... எல்லோரையும் தாங்கியே பேசியிருப்பார்களே!'' என்று சரியாக கணித்தாள் அந்த வீட்டின் மூத்த மருமகள்.

முறுவலித்து, ''கரெக்ட்!'' என்றாள் சின்னவள். ''கூடவே உங்களையும் உயர்த்திப் பேசினார்கள்...'' என்று அதன் விவரம் கூறினாள்.

''அதுதான் நம் அத்தை! தெரிந்து கொள்'' என்றாள் மாலதி பெருமிதமாக. ''கொஞ்சம் அதட்டிப் பேசினாலும், அவர்கள் குணம் யாருக்கும் வராது. விஜு உண்டான போது, முதலில் எனக்கு மசக்கைத் தொந்திரவு ரொம்ப இருந்தது. ஊரில் அம்மாவுக்கும் அப்போது ஏதோ காய்ச்சல். அப்போது எனக்கு எப்படிப் பார்த்தார்கள் தெரியுமா? இந்த மாதிரி மாமியார் கிடைக்க நாம் கொடுத்து வைத்திருக்க வேண்டும்!'' என்றாள் அவள் தொடர்ந்து.

''அதே நினைப்புதான் உங்கள் பெற்றோருக்கும் இருந்திருக்கும் போல... பிரேமா எப்படி அக்கா? அவளுக்கும்... அவளும் ஆசைப்பட்டிருப்பாளா?'' என்று, அவ்வப்போது மனதில் உறுத்திய கேள்வியைச் சித்ரலேகா கேட்டே விட்டாள்... அவளைப் பொறுத்தவரையில் பதிலும் உறுதியாகி விட்டதுதான்.

சற்றுத் தயங்கிவிட்டு, ''பிரேமாவுக்கு நான் கொஞ்சம் அசடு என்கிற எண்ணம். அவள் மனதில் நினைப்பதை என்னிடம் முழுவதாகக் கொட்டியது கிடையாது. ஆனால் உள்ளூர ஆசை இருந்திருக்கும் என்று நினைக்கிறேன்... ஆனால், மாதுத் தம்பிக்கும் அவளுக்கும் இடையே காதல் கீதல் என்று ஒரு காமுசாவும் கிடையாது, சித்ரா. அப்படி ஏதும் இருந்திருந்தால் மாதுத் தம்பி, அவர் அண்ணாவிடம் அதுபற்றி நிச்சயம் சொல்லியிருப்பார்'' என்றுரைத்தாள் மாலதி.

''ஆனால் மாமாதான் முதலிலேயே ஏதோ காரணம் சொல்லிவிட்டார் போல் தெரிகிறதே!''

''ஏது? அந்த அக்கா தங்கைகள் ஓரகத்திகள் ஆகிவிடுவார்கள் என்பதா? அது மெய்யாகவும் இருக்கலாம். பிரேமா நல்ல பெண்தான் என்றாலும், இந்த வீட்டுப் போக்குக்கும் அவளுக்கும் ஒத்துவராது என்று, அப்படி ஒரு கா்ரணத்தைச் சொல்லியிருந்தாலும் இருக்கலாம். முக்கியமாக, அத்தையை அடக்கி வைக்க வேண்டும் என்று ஒருதரம் அவள் சொன்னது மாமா காதில் விழுந்ததோ என்று எனக்கு ஒரு சந்தேகம் உண்டு...''.

மாமியாரின் தன்மை புரியுமுன்பு சித்ரலேகாவும் தான் பலமுறை உள்ளூரக் கோபப்பட்டிருக்கிறாள். வாய்விட்டுச் சொல்லும் தைரியம் இருந்ததில்லை. அவ்வளவுதான். வாய் விட்டுச் சொல்லிவிட்டாள் என்ற ஒரே காரணத்துக்காகப் பாவம் அவள் மனம் ஒடிய நேர்ந்துவிட்டதே!

அது அவ்வளவு நியாயமாகத் தோன்றாதபோதும் மனைவிக்குச் சிறு உறுத்தல் கூட ஏற்படாது மாமனார் கரத்த விதம் போற்றுதலுக்குரியதாகவே ,அவளுக்குத் தோன்றியது.



ஆனால் பிரேமாவிடமும் பரிதாபம் மேலிட்டது.

ஏனெனில் இத்தனை நாட்களில், பிரமோ, மாதவனைக் காதலித்தாள் என்பது சித்ரலேகாவுக்கு நிச்சயமாகிவிட்டிருந்த விசயம்.

பொதுவாக மாலதியோடு இப்படி உட்கார்ந்து பேசுகிற வாய்ப்பு சித்ரலேகாவுக்கு மிகவும் குறைவுதான்.

சற்று பெருந்தனக்காரக் குடும்பம் அவர்களுடையது. எனவே, சற்று வட்டாரங்களில் பல்கிப் பெருகியிருந்த உறவினர் வீட்டு விசேசங்கள் அத்தனைக்கும் அவர்கள் வீட்டுக்கு நேர்முக அழைப்புகள் வரும்.

மாலதி அந்த வீட்டின் மூத்த மருமகள் என்பதோடு தஞ்சையில் மதிப்புடனிருந்த அவளுடைய தாய் வீட்டினருக்கும் இந்த உறவினர்கள் பெரும்பாலும் சொந்தமாகவே இருந்ததால், அந்த வகை அழைப்பும் அவளுக்கு வரும்.

எனவே, இதுபோன்ற இடங்களுக்கு, மாலதியையும் மகனையும் அனுப்பிவிட்டு அன்னபூரணி நிம்மதியாக இருந்து விடுவாள். ஓரிருமுறை அவளோடு கூடச் சென்று யார் என்ன என்று புரியாமல் தவித்துவிட்டு, அதன்பின் இப்படிச் செல்வதையே சித்ரலேகா தவிர்த்தாள்.

காரணத்தைச் சொன்ன பிறகு அன்னபூரணியும் விட்டு விட்டாள். ''மாலதிக்கானால் அம்மா வீட்டிலேயே பழகியவர்கள்... போகட்டும். நாலுதரம் நம் வீட்டுக்கு வந்து போனார்கள் என்றால் பிறகு உனக்கும் எல்லோரும் தெரிந்தவர்கள் ஆகிவிடுவார்கள். அப்புறம் நீயும் போகலாம்'' என்று கூறிவிட்டாள். ''அந்த நேரத்தில் வீட்டு நிர்வாகம்படி'' என்று அது சம்பந்தமான வேலைகளை ஏவினாள்.

கூடவே மாலதிக்கு 'எல்.கே.ஜி.' படிக்கும் மகன் வேறு இருந்தான். சாப்பிட, குளிக்க என்று அவனோடு மல்லாடவே மாலதிக்கு நேரம் சரியாகிப் போகும்.

ஆனால் பிரேமாவுக்கு அந்தமாதிரிக் கடமைகள் ஏதும் இல்லாததால், அடிக்கடி சித்ரலேகாவிடம் வந்து பேசிக் கொண்டு இருப்பாள்.

அப்படிப் பேசிக்கொண்டிருக்கும் போதுதான் அவள் முதலில் வாயை விட்டாள்.

ஒருவர்மேல் அன்பு வைத்துவிட்டால் அவருக்குப் பிடித்தது நமக்குப் பிடிக்கிறது; அவருக்குப் பிடிக்காதது நமக்குப் பிடிக்காமல் போய்விடுகிறது என்று இருவரும் பொதுப்படையாக ஏதோ பேசிக் கொண்டு இருந்தபோது, 'நானும் அப்படித்தான். சின்ன அத்தானுக்கு லட்டு பிடிக்காது என்று நான் லட்டு சாப்பிடுவதையே விட்டு விட்டேன்'' என்று உரைத்து விட்டு, சட்டென வாயைக் கைகளால் பொத்திக் கொண்டாள்.

அவளைப் பரிவுடன் பார்த்தபடி, சித்ரலேகா பேசாதிருக்கவும், சன்னக் குரலில் மன்னிப்புக் கேட்டுவிட்டு, ''இந்த உண்மைக்காக என்னை வெறுத்து விடுவாயா, சித்ரா?'' என்று தன் பெரிய விழிகளில் அவள் ஏக்கத்துடன் வினவவும், சித்ரலேகாவுக்கு அப்படியே உருகிவிட்டது.

பிரேமாவின் கைகளைப் பற்றி, ''சேச்சே... என்ன நீ? உன் மனம் எனக்கு முன்பே தெரியும். ஆனால், இதுவரை உன்னிடம் ஒரு சிறு வெறுப்பு காட்டியது உண்டா? நீ என்றைக்கும் என் சினேகிதிதான்'' என்று அவளைத் தேற்றினாள் சித்ரலேகா.

ஆறுதலாகப் பெருமூச்சு விட்டாள் மற்றவள்.



அதன்பின் எந்தவித மறைப்பும் இன்றி இருவரும் பேசிக் கொள்வார்கள். கூடப் பிறந்த தமக்கை என்றபோதும் மாலதியிடம் சொல்ல முடியாது என்றே உள்ளே பூட்டி வைத்ததை எல்லாம் சித்ரலேகாவிடம் கூறினாள் பிரேமா. ''உன்னை வெறுப்பேன் என்று நினைத்தேன். ஆனால் நீயானால் உயிர் சினேகிதி ஆகிவிட்டாய்!'' என்று கூறி மகிழ்ந்தாள்.

சித்ரலேகாவும், படுக்கையறை இரகசியங்கள் தவிர, மற்றபடி பிரேமியோடு ஒளிவு மறைவின்றித்தான் பேசினாள்.

கணவனின் பரிசுகளைச் சித்ரலேகா காட்டியபோது, அந்த ராஜஸ்தான் சேலையைக் கீழே வைக்கவே பிரேமாவுக்கு மனமில்லை.

அப்புறமும், அடிக்கடி அந்த சேலையை எடுத்துத தரச்சொல்லி வாங்கித் தொட்டுப் பார்ப்பாள். தோள் மீது போட்டுக் கொண்டு கண்ணாடியில் அழகு பார்ப்பாள்.

சித்ரலேகாவுக்குக் கொஞ்சம் ஒரு மாதிரி இருந்தாலும் பாவம், அவளால் இதுதானே முடியும்? இதைக் கட்டிக் கொண்டு மாதவனிடம் காட்டி மகிழவா முடியும் என்று மனம் இளகிப் போவாள். அந்த இளக்கத்தால், கணவன் வாங்கிக் கொடுத்திருந்த மற்ற பொருட்களைப் பிரேமா பயன்படுத்த அனுமதித்தாள். ஆனால் இந்தச் சேலை மட்டும் தனி.

பொதுவாக அந்த வீட்டில் சிறு குறை சித்ரலேகாவுக்கு இருந்தது என்றால், அது அவளுடைய கணவனோடு அதிக நேரம் கலந்து பேசிக்களிக்க முடியாதது ஒன்றுதான்.

மாதவன் குடும்பத்தாரின் தொழில் சலவைக்கல் வியாபாரம். மொசைய்க்கல், கடப்பா, மார்ப்ளெக்ஸ் என்று எல்லாவித தளக் கற்களும் அவர்கள் பதித்துக் கொடுப்பது தான் என்றாலும், சலவைக்கல் வியாபாரத்தில் தனிச்சிறப்பு பெற்றவர்கள். ராஜஸ்தான் 'பிங்க்' சலவைக்கல் கொள்முதல் செய்யப் போன இடத்தில்தான் மாதவன் மனைவிக்கு அந்தச் சேலையை வாங்கியதே.

கற்களை விற்பதோடு, அழகாகப் பதித்தும் கொடுப்பவர்கள் என்பதால், சுற்று வட்டாரத்தில் பெரிய பெரிய ஓட்டல்கள், தியேட்டர்கள், பெரிய பங்களாக்கள் இவற்றின் உரிமையாளர்கள் பெரிதும் இவர்களையே நாடி வந்தனர்.

தந்தையோடு இரு மகன்களும் தொழிலில் முழுக் கவனம் செலுத்தியதால் தொழிலும் சிறப்பாக நடந்தது.

காலை உணவு முடிந்து மூவருமாகக் கிளம்பிச் சென்றால், மதிய உணவுக்குப் பெரியவர் மட்டுமே வீடு வரு' வார். மகன்கள் இருவருக்கும் வீட்டிலிருந்து சாப்பாடு போகும்.

சாப்பிட்டு முடித்து, ஒரு மணிநேரம் ஓய்வு எடுத்துக் கொண்டு சுந்தரேசன் மீண்டும் கிளம்பிச் சென்றால் மூவரும் வீடு திரும்புவது வேலை முடிவதைப் பொறுத்தது. பொதுவாக ஆறரை, ஏழு என்பது வழக்கம்.

அப்போதும் யாராவது பெரிய வாடிக்கையாளரோடு பேச்சு நடத்த வேண்டியிருந்தால், சம்பந்தப்பட்டவர் - தகப்பனாரோ, இரு மகன்களில் ஒருவரோ - திரும்பிவர இரவாகிவிடும்.

அப்படி வந்து,"இரவு உணவு முடிந்தபின், மூவருமாகச் சேர்ந்து மறுநாளைய வேலையைத் திட்டமிட்டுவிட்டு, மாதவன் அறைக்கு வர மணி பத்து ஆகிவிடும்.



பத்து மணிக்கு மேல் புதுமணத் தம்பதிகள் வெறும் பேச்சிலா நேரத்தைச் செலவிடுவார்கள்?

ஞாயிற்றுக் கிழமைகள் மெய்யான விடுமுறை நாட்களே.

பெரியவர்கள் வீட்டில் ஒதுங்கி ஓய்வெடுக்க, விருப்பப்பட்டதைச் செய்யும் சுதந்திரம் இளைய தலைமுறைக்கு இருந்தது.

'எல்லோரும் சேர்ந்து...' என்று கண்ணன் ஏதாவது திட்டமிடவில்லை என்றால் மாதவன் மனைவியை அழைத்துச் செல்லும் இடம் அவர்கள் சொந்தமான தென்னந்தோப்பு!

பெரிய தோப்பு அது. ஏக்கர் கணக்கில் விரிந்து விரிந்து யாய்ப் பசிய ஓலைகளுடன் ஆயிரக் கணக்கில் தென்னை மரங்கள் கண்ணுக்கெட்டிய தூரம் வரை வரிசை வரிசையாகக் காற்றில் அசைந்தாடுவது ஒரு கண்கொள்ளாக் காட்சி!

தோப்பைப் பார்த்துக் கொள்ளும் பணியாட்களுடன் இரண்டு வார்த்தை பேசிவிட்டு, சற்று நேரம் கணக்கு வழக்கை மாதவன் பார்த்து முடித்தான். அப்புறம் ஒரே ஆனந்தம்தான்.

தென்னைமரக் கிளிகளையும், வரிக் குயில்களையும் பார்த்து ரசிப்பதும், கைகோத்துக் கொண்டு, மரங்களுக்கு நீர் பாய்ச்சும் வாய்க்காலில் கரண்டைக்கால் அளவு நீரில் நடப்பதுமாக நேரம் போவதே தெரியாது.

அங்கேயே தயாரித்த உணவை அருந்திவிட்டு, அங்கே உள்ள வீட்டில், ஓட்டு வீட்டு மாடியில் ஓய்வெடுப்பார்கள்.

பாரதியாரின் 'காணிநிலம் வேண்டும்' பாட்டை மாதவன் ரசித்துப் பாடுவான். அதிலும் 'பக்கத்தில் ஒரு பத்தினிப்

பெண் வேண்டும்' என்று அவள் கன்னத்தைத் தட்டும்போது சித்ரலேகாவுக்கு உலகம் மறந்து போகும்!

வேலைப் பளுவோ, வெறுப்பு காட்டும் உறவினரோ இல்லாததால் சித்ரலேகாவின் வாழ்வு இனிமையாகவே கழிந்தது.

அவளுடன் கல்லூரியில் படித்த சீனியர் மாணவன் பிரதீபன், வேலை நிமித்தமாகத் திருச்சி வந்தவன், அவளையும் வந்து பார்த்தான்.

## 4

பிரதீப், சித்ரலேகா படித்த அதே கல்லூரியில் படித்தவன். அவளைவிட இரண்டு ஆண்டுகள் சீனியர். கல்லூரி மாணவர் சங்க தலைவனாக இருந்தான்.

கல்லூரி ஆண்டு விழாக்களில், சித்ரலேகாவின் நடனம் எப்படியும் இருக்கும் என்றவகையில் இருவருக்கும் நல்ல அறிமுகம் உண்டு. கூடவே, அவன் தங்கை இவளது வகுப்பில் படித்தாள்.

நாகையில் புயல் அடித்தபோது, கல்லூரியில் பலவகையில் பணம் திரட்டிக் கொடுத்து உதவினார்கள்.

அங்கங்கே பணத்துக்காகக் கலைநிகழ்ச்சிகள் நடத்திய போது, சித்ரலேகா சளைக்காமல் பங்கெடுத்தாள். பிரதீபின் தங்கை ஜோதி அப்போதுதான் சித்ராவுக்குப் பிரியமான சினேகிதி ஆனது. மூவருமாகச் சேர்ந்து உட்கார்ந்து பேசுவார்கள். ஒருவர் வீட்டுக்கு மற்றவர் செல்லத் தயங்கியதே கிடையாது.



இங்கே திருச்சியில் சித்ரலேகா இருப்பது தெரிந்திருந்ததால், வேலை நிமித்தமாக வந்த பிரதீப், வேலை நேரம் முடிந்ததும், கொஞ்சம் 'கேக்'குகளை வாங்கிக் கொண்டு அவளைப் பார்க்க அவள் வீடு தேடிவந்தான்.

பழைய வழக்கத்தில், "ஹாய்!" என்று அவனை வரவேற்று முறுக்கு, அதிரசம் வைத்து, பழச்சாறும் கொடுத்து உபசரித்து, அவனோடு பேசிக் கொண்டு இருந்தாள் சித்ரலேகா.

அவளுக்குக் கேட்கவும், அவனுக்குச் சொல்லவும் என்று சென்னைச் செய்திகள் நிறைய இருந்தன.

"சாகும்வரை சுரிதார் போடுவேன் என்பாய்! இங்கே பெரியமாமி போலச் சேலையைச் சுற்றிக் கொண்டு நிற்கிறாயே!" பிரதீபன் அதிசயப்பட்டபோது அவளுக்குக் கொஞ்சம் கஷ்டமாக இருந்தது.

சுரிதார் சித்ரலேகாவுக்குப் பிடித்தமான உடை. அணிவதற்கும், அணிந்த பிறகும் இலகுவாக இருக்கும் உடை என்பாள். இந்த ஐந்தரை மீட்டர் நீளச் சேலையைச் சுற்றோ சுற்று என்று சுற்ற, வெகு சிரமப்பட்டு அழகாகக் கொசுவம் வைத்து, மேலே சேலை விலகிவிடாமல் காத்து... அவளுக்குக் கஷ்டமாகத்தான் இருந்தது.

ஆனால், இந்த வீட்டில் சுரிதார் பற்றி நினைத்துப் பார்க்கக்கூட முடியாதே! 'நைட்டி'யைக் கூட அவர்களின் அறைக்குள் மட்டும்தான் அணியலாம்.

'மாமாவுக்குப் பிடிக்காதம்மா' என்ற ஒரே வாக்கியத்தில், அதை ஒத்துக் கொண்டு கீழ்ப்படிந்த மனம் இப்போது முரண்டியது.

ஆடை, அணிகலன்கள் அவரவர் சொந்த விருப்பத்தைப் பொறுத்தது. இதில் இவர்கள் என்ன தலையிடுவது என்று எரிச்சல்பட்டது.

''ஜோதிக்குத் திருமணம் செய்யும்போது கொஞ்சம் நாகரீகமான இடமாகப் பாருங்கள், பிரதீப்'' என்று குறிப்பாய் விளக்கி, தன் கோபத்தை ஆற்றிக் கொண்டாள் அவள்.

''இதற்குமேல் தாமதிக்க முடியாது லேகா. ஓட்டலில், இரவு உணவுக்குத் தொழில் ரீதியாக ஒருவர் வருவதாகச் சொல்லியிருக்கிறார்! வேலை முடிந்தால் நாளையே கிளம்பி விடுவேன். எதற்கும் போன் செய்கிறேன். கிளம்பட்டுமா?'' என்று அவன் எழுந்தபோது மாதவன் தன் அன்னையோடு வந்து சேர்ந்தான்.

பெரியவர், அவருடைய கல்லூரி நண்பர் ஒருவரைத் திடீரென்று சந்தித்தவர், நண்பரை 'கிளப்'பிற்கு அழைத்துச் சென்று பேசிக் கொண்டு இருக்கிறார் என்பதால் பிள்ளைகள் மட்டும் வீடு திரும்பியிருந்தார்கள்.

மரியாதைக்கு இரண்டு வார்த்தை பேசிக் கொண்டு இருந்து விட்டு எழுந்து உள்ளே சென்றான் கண்ணன்.

ஆனால், தன் பசி தாகங்களைச் சற்று ஒதுக்கி வைத்து விட்டு மனைவியுடைய விருந்தாளியோடு சகஜமாகப் பேசிக் கொண்டு இருந்த கணவனை நன்றியோடு நோக்கினாள் சித்ரலேகா.

தன் மறுநாளையத் திட்டம் பற்றி, ஏற்கனவே சித்ரலேகாவிடம் சொல்லியிருந்ததை விவரித்து விட்டு, மாதவனிடம் விடைபெற்று, சித்ரலேகாவிடம், ''வருகிறேன், லேகா!'' என்று கூறிக் கிளம்பினான் அவன்.



பிரதீபன் விடைபெற்றுச் சென்றபின், ''அவரோடு இவ்வளவு சாதாரணமாக உட்கார்ந்து பேசிக் கொண்டு இருந்தாயே!'' என்று மாதவன் வியந்தான்.

''பின்னே?'' என்று குழப்பத்துடன் வினவினாள் மனைவி. ''உட்கார்ந்து பேசாமல் வேறு எப்படி... பழகிய சினேகிதரோடு கூட அமர்ந்து பேசுவதில் என்ன தப்பு இருக்கிறது?'' என்று முடித்தபோது அவள் குரலில் சினம் துளிர்த்திருந்தது.

''சித்ரா, ப்ளீஸ்... நீ அவரோடு பேசியது பற்றி எனக்கு எந்தவித ஆட்சேபனையும் கிடையாது. ஆனால் நம் வீடு கொஞ்சம் - அதாவது சென்னையளவு இந்தப் பக்கம் இன்னமும் முன்னேறவில்லை. அதனால் அம்மா ஏதாவது சொன்னால் நீ தப்பாக எடுத்துக் கொள்ளக் கூடாது. அவ்வளவுதான்... அவர்கள் மனதில் கெடுதல் கிடையாது என்பது உனக்குத் தெரியுமல்லவா?''

ஆத்திரம் அடங்கிவிடத் தலையாட்டினாள் அவள். ''ஆனால், இப்போது பிரதீப்புடன் வேறு எப்படித்தான் நான் பேசியிருக்க வேண்டும் என்கிறீர்கள்?'' என்று வினவினாள் சித்ரலேகா.

அவள் மெய்யாகவே புரியாமல் தான் கேட்கிறாள் என்பதை உணர்ந்து, ''பொதுவாக வேற்று ஆண்கள் வந்தால் வரவேற்பதிலோ, ஏதாவது பானம் கொடுத்து, இன்னும் நெருங்கியவர் என்றால் பானத்தோடு சிற்றுண்டியும் அளித்து உபசரிப்பதிலோ எந்தக் குறையும் இங்கே யாரும் வைப்பதில்லை. ஆனால், அதைச் செய்துவிட்டு, சற்று ஒதுங்கி நின்று கொண்டே பேசுவார்கள். இந்தப் பக்கம் உள்ளவர்கள், பொதுவாகப் பெண்கள் மட்டும் இருக்கும் போது ஆற அமர இருந்து பேச மாட்டார்கள். வேற்றுமை

பாராட்டாமல் சகஜமாகப் பழகுகிறவர்களும், 'நின்று கொண்டே பேசுகிறானே, வேறு என்ன வேலையோ, அவசரமோ' என்று சீக்கிரமே பேச்சை முடித்துக் கொண்டு போய்விடுவார்கள்'' என்றான் அவன்.

கணவன் பேச்சை முழுமையாகச் சித்ராவால் ஒத்துக் கொள்ள முடியவில்லை.

இப்போது பிரதீபனுடன் ஊர்க் கதைகள் பேசியது எவ்வளவு நன்றாக இருந்தது! இதை அரை குறையில் முடித்து அனுப்ப வேண்டும் என்றால் அது நியாயமே இல்லை என்று எண்ணினாள்.

கூடவே இன்னோர் எண்ணமும் தோன்றி அவளுக்கு சஞ்சலத்தை அளித்தது.

இவ்வளவு விளக்கமாய் உரைத்தானே, இது அவன் தாயாருக்காகச் சொன்னதா? இல்லை, மாதவனே அப்படித் தான் நினைக்கிறானா? 'குறிப்பறியமாட்டாதான் நன்மரம்' என்று குறள் கூட உண்டே! இவன் குறிப்பாய் மனைவிக்கு உணர்த்துகிறானா?

கணவன் மனைவிக்குள் என்ன ஒளிவு மறைவு? எல்லாம் வெளிப்படையாகப் பேசுங்களேன் என்று மாதவனிடம் நேரடியாகக் கேட்கவும் சித்ராவுக்கு மனமில்லை. ஒருவேளை, அவன் ஆமாம் அப்படித்தான்; இனி நீ பிரதீபனிடமோ, அந்த மாதிரி மற்ற ஆண்களிடமோ பேசாதே என்று நேரடியாகச் சொல்லிவிட்டால்?

மனதில் கள்ளமின்றிப் பழகியவர்களை, ஒரு பட்டிக் காட்டுத் தனமான எண்ணத்துக்காக அடியோடு விட்டுவிடவோ, அது முடியாது என்று கணவனிடம் சச்சரவிடவோ மனம் இன்றி, அதைப் பற்றி மேலே பேசாமல் வாளாவிருந்து விட்டாள் அவள்.



கணவன் எச்சரித்து, அவள் அச்சத்துடன் எதிர்பார்த்த விதமாகவே, அன்னபூரணியிடமிருந்து ஒரு பேச்சு அவள் கேட்க வேண்டியிருந்தது.

பெற்ற தந்தை எதிரில் கூட அவர்கள் காலத்தில் பெண்கள் சரிசமமாய் உட்கார்ந்து பேசுவது இல்லையாம். அதிலும் ஓர் அந்நிய ஆண்பிள்ளையோடு அமர்ந்து அரட்டை அடிப்பது இந்தக் காலத்தில் கூட மிகத் தவறாம். வேலைக்காரர்கள் தப்பாக எண்ணுவார்களாம். இந்தக் குடும்பத்துக்கு என்று ஒரு கவுரவம் உண்டாம். அதை இந்த வீட்டு மருமகளாக வந்தவள் காப்பாற்ற வேண்டுமே தவிரக் கெடுக்கக் கூடாதாம். அதனால், ''இப்படி எவனாவது வந்தால், மாதவன் வீட்டில் இருக்கும் நேரம் வரச்சொல்லி அவன் முன்னிலையில் வந்த விருந்தாளியோடு பேசு. இல்லாவிட்டால் ஒரு தம்ளர் பழச்சாறோடு வழி அனுப்பி வை'' என்று அன்னபூரணி கண்டிப்பான குரலில் கூறிய போது, சித்ரலேகா வாயே திறக்கவில்லை.

அதுதான் மாதவன் முதலிலேயே எச்சரித்து வைத்திருந்தானே!

ஆனால் சித்ரலேகா வாயை மூடிக் கொண்டு இருந்து விட அவள் மாமியாருக்குப் போதவில்லை. ''பாரம்மா, நீ ஆணும் பெண்ணும் சேர்ந்து படிக்கிற கல்லூரியிலே படிக்கிறவள் என்பது தெரிந்தும் முதலில், இந்தத் திருமணப் பேச்சை நிறுத்திவிடலாம் என்றுதான் நினைத்தோம். பிறகு பார்த்தால், உனக்கும் அவனுக்கும் சாதகத்தில் பத்துப் பொருத்தமும் இருந்தது. அதைச் சட்டென்று எப்படித் தள்ளுவது? அதனால் கல்லூரியில், வெளியே நன்றாக விசாரித்தோம். 'குணத்தில் தங்கம்; ஒரு குறை சொல்ல முடியாது' என்றார்கள். அதனால்தான் சின்னவனுக்கு உன்னை முடிவு செய்தோம். இன்றுவரை அந்த முடிவு பற்றி

நான் வருத்தப்படும்படி நீ நடந்து கொண்டதே கிடையாது. இப்போது போய், உன் 'மெட்ராஸ்' பழக்கத்தை இங்கே காட்டி எல்லார் மனதையும் நோகடித்து விடாதே. புரிகிறதா?'' என்று மீண்டும் ஒரு சொற்பொழிவாற்றி விட்டு, அதட்டிக் கேட்கவும், வேறு வழியின்றிப் 'புரிகிறது அத்தை'' என்று சித்ரலேகா பதில் உரைக்கும்படி ஆயிற்று.

உள்ளூரப் புகைச்சல்தான். அதென்ன 'மெட்ராஸ் பழக்கம்?' அதில் என்ன இன்பம் இருக்கிறது? அப்படி 'மெட்ராஸ் பழக்கம்' மட்டமானது என்றால், 'மெட்ராஸ்' பெண்ணை ஏன் மருமகளாக்கிக் கொள்ள வேண்டும்?

இந்த மாமியார், குணத்தில் நல்லவள்; அன்புள்ளவள்; பெரும்போக்கு உடையவள் என்பதை எல்லாம் பிடிவாதமாக நினைவுக்குக் கொணர்ந்துதான் சித்ரலேகா தன் மனதைச் சமாதானம் செய்துகொள்ள முடிந்தது; ஓரளவேனும்.

நாளை பிரதீபன் போன் செய்வதாகச் சொன்னானே? வீட்டுக்கு வருகிறேன் என்றால் என்ன செய்வது? மாமியாரிடம் இன்னொருதரம் வாங்கிக் கட்டிக் கொள்ள முடியாது. அதே சமயம் ஒரு நல்ல நண்பனை விரட்டுவதும் அவளுக்கு வேதனையாக இருந்தது.

இடையே, ''அத்தையிடம் சரியான மண்டகப்படி போல் இருக்கிறது!'' என்று கேலி பேசி, பிரேமி வேறு புண்ணியம் கட்டிக் கொண்டாள்.

மறுநாள் காலை எட்டரை மணி அளவில் அந்த வீட்டு ஹாலில் இருந்த போனில் மணியடித்தது. அதைப் பிரேமி எடுத்துப் பேசிவிட்டு கீழே வைத்து விட்டுத் தோளைக் குலுக்கினாள்.

எல்.கே.ஜி. படிக்கும் வினுவுக்கு பள்ளிச் சீருடை அணிவித்து, இட்லியை ஊட்டிவிட்டபடியே, மகனைக்



கண்ணால் காட்டி, ''மாலையில் 'பூஸ்டர்' தடுப்பூசி போட வேண்டும். நாலு மணிக்கே வந்து விடுங்கள்...'' என்ற மனைவியை இடைமறித்து, ''எனக்கு ஒரு முக்கியமான வேலை இருக்கிறதே. மாலு, நீ அம்மாவை... இல்லை, அம்மா இன்று சின்ன அத்தை மகளுக்குத் திருமணம் பேசி முடிவு செய்ய மாப்பிள்ளை வீட்டார் வருவதால் மதியமே திருவரம்பூர் போய்விடுவார்கள். அதனால் நீ... பிரேமா அல்லது சித்ராவுடன்...'' என்ற கண்ணன், தயக்கத்துடன் நிறுத்தினான்.

அவன் மகன் வினுவுக்கு ஊசி போடுவது எளிதான காரியம் அல்ல. தந்தையிடம் மட்டும்தான் அவன் கொஞ்சம் அடங்குவான்!

மனைவியும் அதையே உணர்த்துவது போலச் சற்றுக் கேலியாக நோக்கவும், முறுவலித்து, ''சரி சரி, வந்து விடுகிறேன். ஆனால் இன்று இது பெரிய ஆர்டர். ஒரு பத்து மாடிக் கட்டிடத்துக்குத் தளம் பதிப்பது பற்றிப் பேச ஓட்டல் கோகுலத்துக்கு நாலு மணிக்கு வருகிறார்கள்... அவர்களைப் பார்க்க மாதுவைப் போகச் சொல்லி விடுகிறேன்'' என்றான் அவன்.

''அப்படியே திருவரங்கம் கோயிலுக்கும் போய்விட்டு வரலாம்'' என்று மாலதி கூற, அவள் கணவன் தலையாட்டினான்.

வினு உணவருந்தி முடிந்ததும், அவனது தண்ணீர் பாட்டில், பிஸ்கெட் டப்பா, கைத்துண்டு அடங்கிய சிறு பெட்டியை எடுத்து வந்து கொடுத்தாள் பிரேமா.

அன்று மதிய உணவுக்கு மேல், சித்ரலேகாவுடன் பேசிக் கொண்டிருப்பதற்காக அவள் அறைக்குப் பிரேமா சென்றாள்.

அங்கே சித்ராவின் ராஜஸ்தான் சேலையை எடுத்துப் பார்த்துக் கொண்டு இருந்தவள், சித்ராவிடம் திரும்பி, "சித்ரா நான் ஒன்று கேட்டால் மறுக்காமல் தருவாயா?" என்று ஆசையோடு கேட்டாள்.

"அப்போடா! 'ஒன்றைக் கேட்டால் அதை நான் எப்படித் தரமுடியும்? அது வெறும் 'என்' அல்லவா?" என்று சித்ரா சிரித்தாள்.

கூடச் சேர்ந்து நகைக்காமல் உச்சுக் கொட்டினாள் பிரேமா. "நான் ஆசையாகக் கேட்டால்..." என்றாள் சோகமாக.

"சரிப்பா. கேலி பேசவில்லை. என்ன வேண்டும் சொல்லு" என்றவள், அடுத்தவள் கேட்ட பொருளை அறிந்ததும் திகைத்து நின்றாள்.

"பிரேமா, இது... இது... அவர் எனக்கென்று ஆசையாய் வாங்கி வந்தது. இதை எப்படித் தரமுடியும்?" என்று மறுத்தாள்.

"எனக்கே எனக்கு என்று கேட்கவில்லை, சித்ரா. கொஞ்ச நேரம் கட்டிப் பார்த்து விட்டுத் தந்து விடுகிறேன். பார், இன்றைக்கு வீட்டில் யாரும் இல்லை. அக்கா வினுவுக்கு 'பூஸ்டர்' ஊசி போட நாலு மணிக்குப் போய்விட்டு வர மணி எட்டாகும். அத்தை திருவரம்பூர் போகிறார்கள். அவர்களும் இரவுதான் வருவார்கள். தனியாக ஓர் அரை மணி நேரம் இந்த ராஜஸ்தான் சேலையைக் கட்டிக் கொண்டு இருந்துவிட்டு, அப்படியே திருப்பித் தந்துவிடுகிறேன். என் அறைக்குள்தான். பிளீஸ், சித்ரா. எனக்கு ரொம்ப ஆசையாக இருக்கிறது" என்று கேட்டபோது பிரேமாவின் குரல் கெஞ்சியது.



அப்போதும் சித்ரலேகாவுக்குத் தயக்கம்தான். கூடவே அவளுடைய கணவன் அவளுக்கென்று தனிப்பட வாங்கி வந்து அளித்ததை அடுத்தவள் அணிவது அவளுக்கு உள்ளூரப் பிடிக்கவும் இல்லை. ஆனால், விரும்பிக் கேட்கும் சிநேகிதியிடம் ஒரேயடியாக மறுக்கவும் முடியாமல் தடுமாறினாள்.

ஆனால், "என்ன சித்ரா, இப்படித் தயங்குகிறாயே கொஞ்சம் எண்ணிப்பார். அக்காவும் நானும் ஒரே வீட்டில் பிறந்திரா விட்டால், இன்றைய உன் இடம் என்னுடையதாகவே இருந்திருக்கும். சின்ன அத்தானும் என் கணவராக இருந்திருப்பார்; இந்தச் சேலையும் எனதாகவே இருந்திருக்கும். என் பிழையின்றி எல்லாவற்றையும் இழந்தேன். இப்போது நான் என்ன, சின்ன அத்தானையேவா கேட்டு விட்டேன்? கதவைப் பூட்டி விட்டு, இந்தச் சேலையை உடுத்திக் கொண்டு, கண்ணாடி முன் சற்றுநேரம் அமர்ந்திருந்தால் மனம் ஆறிவிடும் போல இருந்தது. ஆனால், அந்த ஆறுதலுக்குக் கூட நான் கொடுத்து வைக்கவில்லை போல. மற்றபடி, உன் மனதில் கூடவா இரக்கம் வற்றிப்போகும்? போகிறது விடு. எதற்கும் ஏங்கி ஏங்கியே சாக வேண்டும் என்பது என் தலைவிதி! இந்தா..." என்று விழிகளில் நீர் ததும்ப உரைத்தபடி, சேலையை மீண்டும் ஒருதரம் வருடி விட்டு, எடுத்து சித்ராவிடம் நீட்டினாள்.

மனம் ஒரேயடியாக உருகிவிட்டது மற்றவர்களுக்கு. "ப... பரவாயில்லை, பிரேமி. அவருக்குப் பிடிக்காதோ என்று கொஞ்சம் யோசித்தேன். அவ்வளவுதான். இதோ இப்போதே வேண்டுமானாலும் எடுத்துப்போ. மாலாக்கா வெளியே போன பிறகு கட்டிப் பார்த்துவிட்டுத் திரும்பிவிடு" என்று அனுமதி கொடுத்துவிட்டாள்.

மூன்று மணியளவில், அலையடித்து ஓய்வது போல, அன்னபூரணி தன் சின்ன நாத்தனார் வீட்டுக்குக் கிளம்பிச் சென்று விட்டாள்.

நாலு மணிக்குக் கண்ணனுடைய குடும்பம் மருத்துவரை நாடிச் சென்றது.

அப்படியே கோயில்; அப்படியே சாப்பாடு வெளியே என்று கூறிச் சென்றார்கள்.

பிரேமாவைக் கண்ணிலேயே காணோம்.

பின்பக்கம் சமையல்காரியும் எடுபிடியும், முன்புறம் தோட்டக்காரனும் தவிர வீடு ஆள் அரவமே இல்லாமல் 'ஹோ'வென்று இருந்தது.

சற்று நேரத்தில், வீட்டு டெலிபோன் மணி அடித்தது.

எடுத்தால், ''திருமதி சித்ரலேகா மாதவனோடு பேச வேண்டும்'' என்று யாரோ கம்மிய குரலில் கேட்டார்கள்.

பேசுவது சித்ரலேகா மாதவன்தான் என்று அறிந்ததும், ''பாருங்கள் மேடம், மிஸ்டர் பிரதீபன் உங்களிடம் ஒரு தகவல் சொல்லச் சொன்னார். ஒரு சிறுவேலை மட்டும் பாக்கி இருந்ததால், எதற்கு முழுநாள் வாடகை கொடுப்பது என்று ஓட்டல் அறையைக் காலி செய்து, சாமான்களை ரெயில் நிலையத்தில் ''சாமான் அறையில்'' வைத்துவிட்டு வேலையைப் பார்க்கப் போயிருப்பதாகவும், இன்று இரவே ஊருக்குக் கிளம்பிப் போவதாகவும், அதற்கு முன் அவருடைய குடும்ப விசயமாக வெகு முக்கியமாகவும் இரகசியமாகவும் உங்களோடு அவர் பேச வேண்டியிருப்பதாகவும், அப்படிப் பேச உங்கள் வீட்டு சூழ்நிலை அவ்வளவாகச் சரியில்லை என்பதால் மலைக்கோட்டை தாயுமானவர் கோயிலுக்குள் காத்திருக்கும்படியும், சுமார் ஐந்து...



ஐந்தரை மணிக்கு அங்கே உங்களைச் சந்திப்பதாகவும் சொல்லச் சொன்னார்'' என்று முடித்தாள் அந்தக் கம்மல் குரல் பெண்மணி.

ஐந்தரை மணிக்கு மலைக்கோட்டைக்குத் தனியாகப் போய், பிரதீபனைத் தனிமையில் சந்திப்பதா? நடக்கிற காரியமா? இது என்ன, சென்னை என்று எண்ணி விட்டானா? அந்தச் சென்னையிலே கூட அவள் அப்படி யாரையும் தனியே சென்று சந்தித்தது கிடையாதே!

ஒருவேளை, மணமானவள் என்பதால், ஒரு குடும்பத் தலைவிக்கு உரிய உரிமைகள் சித்ரலேகாவுக்கு இருக்கும் என்று எண்ணிவிட்டான் போலும்!

அவள் வேலை முடித்து அவசரமாக ''பாருங்கள், இன்றைக்கு மலைக்கோட்டைப் பக்கம் வர எனக்கு வசதிப்படாது என்று அவரிடம் சொல்லி விடுகிறீர்களா?'' என்று கேட்கும்போதே மனதுக்குக் கொஞ்சம் வேதனையாக இருந்தது.

குடும்ப விசயம் என்றால், ஜோதியைப் பற்றித்தான் ஏதாவது இருக்கும். தாயற்ற அந்தப் பெண்ணைப் பற்றிய ஏதோ சிக்கல்; அதற்கு உதவ முடியவில்லையே என்று வருத்தப்படும்போதே, இன்னொன்று உறுத்த, ''முதலில் நீங்கள் யார்? பிரதீபன், அவரே போன் செய்யாமல் ஏன் உங்கள் மூலம் தகவல் தரவேண்டும்?'' என்று வினவினாள்.

''அது எனக்கு எப்படித் தெரியும், மேடம்?'' என்றாள் அந்தப் பெண். ''நான் ஒரு சாதாரண செயலாளர் வேலை பார்ப்பவள். என் முதலாளியோடு வியாபாரம் பேசப் போகும் ஒருவர், என் முதலாளியின் முன்னிலையில், இப்படி இன்னொருவருக்குத் தகவல் கொடு என்றால், மறுக்க முடியுமா? ஏன், எதற்காக என்று கேட்க முடியுமா?

என்னைப் பொறுத்தவரையில் அவர் சொன்ன சேதியை நான் உங்களுக்குத் தெரிவித்து விட்டேன். ஆனால், உங்கள் மறுப்பை என்னால் அவரிடம் சொல்ல இயலாது. ஏனென்றால் அவர் என் முதலாளியோடு பேசி முடித்து விட்டு, உங்களைச் சந்திக்க நேரே அங்கே வரப்போவதாகவும் உங்களிடம் பேசிவிட்டு அப்படியே ரயிலேறப் போவதாகவும் கூறினார். அதனால், உங்கள் தகவலை நீங்களே அவரிடம் நேரிலேயே தெரிவியுங்கள்'' என்றவள் மேலே பேச இடம் கொடாமல், ''எனக்கு நிறைய வேலை இருக்கிறது. வைக்கிறேன்'' என்று போனை வைத்து விட்டாள்.

என்ன செய்வது என்று ஒன்றும் புரியாமல் சித்ரலேகா குழம்பி நின்றாள்.

இந்த வீட்டில், அவளைச் சந்தித்து, ஒளிவு மறைவின்றிப் பேசுவது சாத்தியம் இல்லை என்று பிரதீபன் முடிவெடுத்ததில் அவளுக்கு வியப்பேதும் தோன்றவில்லை.

முதல் நாள் பிரதீபனும் அவளும் பேசிக் கொண்டு இருந்த போது மாமியார் குறுக்கும் நெடுக்குமாய் இரண்டு தரம் போனார்கள். இவள் பேச்சு சுவாரசியத்தில் இருந்தாலும், அவன் அவர்கள் முகத்திலிருந்து எதையேனும் ஊகித்திருக்கக்கூடும்!

ஆனால், இங்கிருந்து அவள் தனியே வருவதும் சிரமம் என்று அவனுக்குத் தெரியவில்லையே!

அது தெரியாமல், அவள் வருவாள் வருவாள் என்று அங்கே போய்க் காத்துக் கொண்டு இருக்கப் போகிறானே என்று தவிப்பாக இருந்தது அவளுக்கு. கூடவே நெருங்கிய தோழி ஜோதி; அவள் விசயமாய் உதவ முடியாவிட்டால் எப்படி என்று அதுவேறு.



சித்ரலேகா குழப்பமும் கவலையுமாகத் தவித்துக் கொண்டு இருந்த போது, பிரேமா வெளியே இருந்து உள்ளே வந்தாள். கையில் ஒரு பையில் ஏதோ சாமான்கள். ஏதோ கடைக்குப் போய்விட்டுத் திரும்பியிருப்பாள் போலத் தோன்றியது.

''தனியாகவா கடைக்குப் போனாய்?'' என்று ஆச்சரியமாய்க் கேட்கும்போதே சித்ரலேகாவின் மனமும் முரண்டியது.

இவள் திருமணம் ஆகாத கன்னிப் பெண். விருப்பம் போலச் சுற்றிவிட்டு வருகிறாள்! தனக்கு மட்டும் என்ன தடை உத்தரவு?

''ஏன்? தனியாய்ப் போனால் பூதம் தூக்கிக் கொண்டு போய்விடுமா?'' என்று எகத்தாளமாகக்கேட்டாள் பிரேமா. குரலைத் தணித்து, ''அதுதான் அத்தைகூட வீட்டில் இல்லையே, ஏதாவது ''ஙை ஙை'' என்று சொல்லிக் கொண்டு இருப்பதற்கு. அதனால்தான்... அந்தச் சேலைக்குச் சரியாக நகச்சாயம், உதட்டுச் சாயம், பூ எல்லாம் வாங்கி வந்தேன். சித்ரா, தயவு செய்து நானாக வெளிவரும்வரை என்னை எதற்கும் கூப்பிட வேண்டாம்; என்ன? நான்... நான் என் விதியை எண்ணி ஒரு மணிநேரம் தனியாக வேதனைப்பட விட்டுவிடு'' என்று சோகமாகக் கூறிவிட்டுப் படியேறிச் சென்றாள்.

அவள் சொன்னதில் சித்ரலேகாவுக்கு ஒன்று உறைத்தது. ஏதாவது சொல்வதற்கு அத்தை கூட வீட்டில் இல்லை! கூடவே, வேலையாட்கள் மூலம் வீட்டினரை வேவு பார்க்கும் சின்னத்தனமும் அவர்களுக்குக் கிடையாது! சற்றுப் பழமைவாதியே தவிரப் பெருந்தன்மையானவர்கள்தான்.

பின்னே மலைக்கோட்டைக்குப் போய் வந்தால் என்ன?

அவள் ஒன்றும், யாரும் இல்லாத தனியிடத்தில், தப்பு எண்ணத்தோடு பிரதீபனைச் சந்திக்கப் போகவில்லையே! பத்துநூறு பேர் எப்போதும் போய்வந்து கொண்டு இருக்கிற இடத்தில், அவன் தங்கை விசயமாக ஆலோசனை சொல்லப் போகிறாள். அவ்வளவுதானே?

எதற்கும் கணவனுக்கு போன் செய்து விட்டுப் போகலாமா என்று எண்ணிப் பார்த்து விட்டு அந்த எண்ணத்தை உடனே கைவிட்டாள்.

வேலை நேரத்தில் பெண்டாட்டியோடு பேசிக் கொண்டிருந்தால் பெரியவருக்குப் பிடிக்காது என்பதால், வெகு வெகு முக்கியமாக பேசாமல் தீராது என்று இருந்தால் தவிர, வீட்டுப் பெண்கள் அலுவலகத்துக்கு போன் செய்வது கிடையாது.

கூடவே, மதியத்துக்கு மேல், மூவருமே அப்போதைய வேலை நடக்கும் தளங்களை பார்வையிட, பேச்சு நடத்த என்று வெளியே போய்விடுவார்கள்.

இப்போது, பிரதீபனிடம் அவள் அங்கே வருவதற்கில்லை என்று சொல்ல முடிந்தால் கூடப் பரவாயில்லை. அதின்றி இவள் வருவாள், வருவாள் என்று அவன் அங்கே வருவதாகக் காத்துக்கிடக்க விடுவது சரியில்லை.

எனவே, மலைக்கோட்டைக்குப் போய்வருவது; யாரும் எதுவும் கேட்டால், "தனியாக ஏனோ மனது கஷ்டமாக இருந்தது; அதனால் கோயிலுக்குப் போய் வந்தேன்" என்று சொல்லிக் கொள்ளலாம் என்று முடிவு செய்தாள்.

இந்த முடிவு அவள் வாழ்வின் அடித்தளத்தையே ஆட்டம் காண வைக்கப் போகிறது என்று அப்போது அவளுக்குத் தெரியாது!



## 5

மனது சரியில்லை; கோயிலுக்குப் போய் வந்தேன் என்று கூறினால் யாரும் எதுவும் சொல்லமாட்டார்கள் என்பது சித்ரலேகாவின் எண்ணம். ஆனால், அதனாலேயே அவள் மனது அதிகமாகச் சரியில்லாமல் போக நேர்ந்தது!

மாமியார் கூட இந்தக் காரணத்தை ஒப்புக் கொள்ளுவாள்; அதிலும், கழுத்தை நன்றாக மூடிக் கொண்டு போனேன் என்றால், அப்புறம் 'கழுத்து நகை, அதில் கோத்த அம்மையப்பன்' என்று ஒன்றும் சொல்ல முடியாது என்று மனதில் ஒரு நிச்சயம்.

வீட்டில் பிரேமா இருந்ததால், யாரும் இல்லாமல் வீட்டைப் போட்டுவிட்டுப் போனாள் என்று சொல்ல முடியாது!

இப்படி எல்லா வகையிலும் யோசித்து விட்டுத்தான் சித்ரலேகா, பிரதீபனின் வேண்டுகோளின்படி மலைக்கோட்டைக்குக் கிளம்பியதே.

அவளது திருமணத்தின்போதே, ஜோதி, தான் யாரையோ காதலிப்பதாகவும், அண்ணன் ஒத்துக் கொள்வானோ மாட்டானோ என்று கவலையாக இருப்பதாகவும் சொல்லியிருந்தாள்.

அதுபற்றித்தான் பிரதீபன் பேச விழைந்திருப்பான் என்று நிச்சயித்துவிட்ட சித்ரலேகா, தோழிக்கு ஆதரவாக எப்படி எப்படித் தோழியுடைய அண்ணனிடம் பேசுவது

என்று பல்வேறு வாதப் பிரதிவாதங்களை யோசித்தபடி தாயுமானவர் கோயிலில், அதன் பெரிய சாளரங்களில் ஒன்றை ஒட்டியவாறு பிரதீபனுக்காகக் காத்துக் கொண்டு நின்றாள்.

உட்கார்ந்து அமைதியாய் சிந்திக்க முடியாமல், உடலும் மனமும் பரபரத்தபடியால், அந்தக்கால சாளரங்களின் வழியே வெளியே பார்ப்பதும், கைக்கடிகாரத்தைத் திருப்பி மணியைப் பார்ப்பதும், பிரதீபனிடம் பேசவேண்டியதை யோசிப்பதுமாக கால் மாற்றி, மாற்றி கால்கடுக்க அவள் நின்று கொண்டே இருந்தாளே தவிர, அந்தப் பிரதீபன் அங்கு வரவே இல்லை!

வெளியே சூரிய ஒளி மறைந்து திருச்சி மாநகரத்தின் ஒளிவிளக்குகள் உயிர் பெற்று பளிச்சிடவும், அவளுக்கு நெஞ்சுக்குள் ஏதோ பிசைவது போல இருந்தது.

வேறு எதுவுமில்லை, அச்சம்தான்.

ஐந்து ஐந்தரைக்குள் வருவதாகச் சொன்னவனை இன்னமும் காணோமே, அவனுக்கு ஏதேனும் விபத்தோ என்று அச்சம். ஒருவேளை வேலை முடிய நேரம் அதிகம் ஆகி, அவன் இனி வந்தாலும், சற்று இருந்து அவனோடு பேசி விட்டுப் போனால் அவள் வீடு போய்ச் சேர வெகு தாமதம் ஆகிவிடுமே; அப்புறம் புகுந்த வீட்டில் அவள் பாடு பெரும்பாடாகப் போய்விடுமோ என்று இன்னொரு அச்சம்.

ஆனால், இரண்டாம் பயத்தைவிடவும், முதல் அச்சமே பேரச்சமாக மாறி அவளைக் கலக்கியது.

ஏனெனில், சொல்லிவிட்டு வராதிருக்கக் கூடியவன் அல்ல, பிரதீபன்! சொன்ன வாக்கு காப்பாற்றுகிறவன்.



அப்படியே அவனுக்கு ஏதேனும் நேர்ந்திருந்தாலும், அப்போது அவளால் ஆகக்கூடியது ஒன்றுமில்லை என்பதை உணர்ந்து, இனித் தாமதிப்பதில் பயனில்லை என்று முடிவு செய்து, அவள் தாயுமானவர் கோயிலில் இருந்து கிளம்பியபோது மணி ஆறேகால் ஆகிவிட்டது.

ஓட்டமும் நடையுமாக இறங்கி வந்து, மாணிக்க விநாயகர் சன்னிதியில் ஒருதரம் சென்னியில் போட்டுக் கொண்டு, வெளியே வந்து ஆட்டோ பிடித்துக் கொண்டு அவள் வீடு வந்து சேர்ந்தபோது மணி ஏழடிக்கச் சற்று நேரமே இருந்தது.

ஒரே ஒரு நிம்மதி தரும் விசயமாக, வெளியே சென்றிருந்த யாரும் வீடு வந்து சேர்ந்திருக்கவே இல்லை அன்னபூரணி, மாலதி குடும்பம், மாதவன், அவனுடைய தந்தை... ஊகும் யாரும் வரவில்லை.

அப்பாடி என்று நிம்மதியாகப் பெருமூச்சு விட்டவளுக்கு, அந்த நிம்மதியின் ஆயுள் அற்பாயுசு என்பது அப்போது தெரியாது போயிற்று.

அறைக்குச் சென்று முகம் கழுவி, உடைமாற்றிவிட்டு வந்தவளிடம், மடித்து எடுத்து வந்த ராஜஸ்தான் சேலையை நீட்டினாள் பிரேமா.

''ரொம்பவும் நன்றி, சித்ரா. உள்ளே வைத்துக் கொள். நான் சற்றுத் தோட்டத்தில் உலாவப் போகிறேன். லேசாகத் தலையை வலிக்கிறது'' என்று கூறி வெளியே சென்றாள்.

ஒருபுறம் பரிதாபமாக இருந்தபோதும், நலுங்கியிருந்த சேலையைப் பார்க்கக் கொஞ்சம் ஒருமாதிரியாகவும் இருந்தது. இதைக் கட்டிக் கொண்டு இருந்தபோது என்னென்ன கற்பனைகள் செய்திருப்பாள் என்பது ஒன்றும் ஊகிக்க முடியாதது அல்லவே!

'இதை 'டிரைக்கிளீனிங்'குக்கு அனுப்ப வேண்டும்' என்று எண்ணியவளாய்ச் சேலையை அலமாரியில் ஒருபுறமாய் வைத்து விட்டு, சமையல்காரம்மாளிடம் சென்றாள் சித்ரலேகா.

எல்லாம் அன்னபூரணியே திட்டம் பண்ணிச் சொல்லி விட்டுப் போனதுதான்.

அதன்படி எல்லாம் தயாராக இருப்பதாக அந்த அம்மாள் கூறவும், தலையாட்டிவிட்டு மீண்டும் மாடியில் இருந்த அவர்களது அறைக்குச் சென்றாள்.

மனம் மீண்டும் பிரதீபனிடம் சென்றது.

அவன் ஏன் வரவில்லை? ஒருவேளை, அவள் திரும்பி வந்ததும் அவன் அங்கே, தாயுமானவர் கோயிலுக்குப் போயிருப்பானோ? பாவம்! அவளிடம் என்ன சொல்ல விரும்பினானோ?

அவன் என்ன சொல்ல நினைத்துச் சொல்ல முடியாமல் போயிருந்தாலும் பரவாயில்லை; அவனுக்கு எந்த ஆபத்தும் நேர்ந்திருக்கக் கூடாது கடவுளே என்று வேண்டிக் கொண்டாள். ஜோதிக்குத் தாயார் இல்லாததே பெருங்குறை. இந்த அண்ணனையும் இழக்கும்படி ஆகிவிடக் கூடாது.

வாயிற்புறம் கார் சத்தம் கேட்டது.

எட்டிப் பார்த்தாள். மாதவன்தான். மாமனார்தான் மனைவியோடு திருவரம்பூர் சென்றிருக்கிறாரே!

மடமடவென்று கீழே இறங்கி வந்தாள்.

வாயிற்புறம் சென்றபோது அவனிடம் என்னவோ சொல்லிக் கொண்டு இருந்த பிரேமா கலீரென்று சிரிப்பது கேட்டது.



இந்தச் சிரிப்புச் சத்தம் ஏதோ கண்ணாடிச் சாமான் கல் தரையில் விழுந்து உடைந்தது போல இந்தச் சிரிப்பு மட்டும் பிரேமாவிடம் ரொம்பவும் செயற்கையாக சித்ரலேகாவுக்குப் பிடிக்கவே பிடிக்காது.

மாதவனுக்கும் கூட அந்தச் சிரிப்பு பிடிக்கவில்லை போலும். முகச் சிணுக்கத்துடனேயே வீட்டினுள் வந்தான்.

எதிரே வந்த மனைவியைக் கவனியாதது போலத் தரையைப் பார்த்தபடி மாடிப்பக்கம் போனான் மாதவன்.

பின்னோடு சென்று, ''சாப்பாடு எடுத்து வைக்கச் சொல்லட்டுமா?'' என்று வினவினாள் சித்ரலேகா.

''வேண்டாம்'' என்று முழுக்கைச் சட்டையின் கைபட்டன்களை அதே கவனம் போலக் கழற்றியவன் கையிலிருந்த பார்வையை உயர்த்தி அவளை நோக்கினான்.

ஏதோ விளக்கம் கோருவது போல... எதையோ எதிர்பார்ப்பது போல அந்தப் பார்வை புரியாமல், ''எ... என்ன?'' என்று வினவினாள் மனைவி.

பார்வை விலகிவிட, சட்டையைக் கழற்றியபடி, ''சாப்பாடு வேண்டாம். பசிக்கலை'' என்றான் அவன் அயர்வுடன்.

''ஏன்? உடம்புக்கு ஒன்றுமில்லையே?'' என்று கவலையுடன் கணவனைத் தொட்டுப் பார்த்தாள் சித்ரலேகா.

அவள் கையை விலக்கி விட்டுவிட்டு, ''பசி இல்லை என்றால் விடேன். உனக்குப் பசித்தால் போய்ச் சாப்பிடு. எனக்கு ஒன்றும் வேண்டாம்'' என்றவன், டவலை எடுத்துக் கொண்டு குளியலறைக்குள் புகுந்தான்.

சற்றுத் திகைத்துவிட்டு, ''மாலைச் சிற்றுண்டி பலம் போலும்'' என்று தனக்குத்தானே சமாதானம் கூறிக்

கொண்டு, பிரேமாவை உணவருந்த அழைத்தாள் சித்ரலேகா.

பிரேமா ரசித்து உண்கையில், தனக்கு மட்டும் உணவு வெறும் சக்கையாக ஏன் தோன்றுகிறது என்று யோசித்தாள் அவள்.

ஒருவேளை, அடிமனதில் பிரதீபனின் நலம் பற்றிய சஞ்சலம் இருந்து கொண்டே இருப்பதால் பசி மந்தித்து விட்டதோ?

அன்றைய இரவிலும், மாதவனின் நடத்தையில் ஒரு வேறுபாடு இருந்ததைச் சித்ரலேகா உணர்ந்தாள்.

தொழிலைப் பற்றி வீட்டுப் பெண்களிடம் விவரம் பேசும் வழக்கம் அந்த வீட்டில் கிடையாது என்றாலும், அன்று நடந்த ஏதாவது வேடிக்கை, விநோதங்கள் குறித்து மாதவன் அவ்வப்போது கூறுவது உண்டு.

ஆனால் இன்று மவுன சாமியார் போல, அவள் பால் கொண்டு வந்து வைப்பதையும், தலையணையைத் தட்டி, சீர்ப்படுத்தி வைப்பதையும், 'நைட்டி'யை எடுத்துக் கொண்டு குளியலறை செல்வதையும், 'நைட்டி'யில் திரும்பி வருவதையும் பார்த்துக் கொண்டு பேசாமலே அமர்ந்திருந்தான்.

பார்வையில் மட்டும் அந்த எதிர்பார்ப்பு!

அவள் பால் தம்ளரை எடுத்துக் கொடுக்கும்போது ஏதாவது 'செக்ஸ்' ஜோக் சொல்லி அவளைச் சிவக்கடிப்பது மாதவனின் வழக்கம்.

ஆனால் அன்று பேசாமல் வாங்கிப் பாலைக் குடித்து விட்டுத் தம்ளரைத் திருப்பிக் கொடுத்தான்.



அவள் தம்ளரை அலசிக் கொணர்ந்து, அங்கிருந்த தண்ணீர்க் கூஜா அருகில் வைக்கவும், ''இன்று எங்கேனும் வெளியே போயிருந்தாயா, சித்ரா?'' என்று ஓர் உணர்ச்சியற்ற குரலில் வினவினான் அவன்.

தனியாகச் சென்றது தெரிந்தால் 'டோஸ்' விழக்கூடும் என்பதால், சொல்லாமலே இருந்து விடலாம் என்று எண்ணியிருந்தவள், சட்டென, ''இல்..'' என்று தொடங்கிவிட்டாள்.

அதற்குள்ளாக, மலைக் கோட்டையில் அவளைப் பார்த்த யாரேனும் கணவனிடம் சொல்லியிருக்கக் கூடுமோ என்றும் தோன்றிவிட, ''ம... மலைக்கோட்டைக்குப் போயிருந்தேன். ம... மனது கொஞ்சம் ஒரு மாதிரியிருந்ததால் கோயிலுக்கு...'' என்று தொடர்ந்து அவள் பேசி முடிக்கு முன், எழுந்து சென்று படுத்துவிட்டான் மாதவன்.

வெளிப்புறம் திரும்பிப் படுத்திருந்த கணவனைப் பார்த்ததும் சற்று நேரம் சித்ரலேகாவுக்கு ஒன்றுமே புரியவில்லை.

அவர்கள் இருவருக்கும் திருமணம் ஆனதில் இருந்து, அவன் இப்படி அவளிடம் முகம் திருப்பியதே கிடையாது! அதுவும் இரவில்! பகலில் வேலை நிமித்தம் சற்று கவனமின்றி நடந்தாலும் இரவுகள் தனிப்பட்டவை ஆயிற்றே!

தனியாகச் சென்றதற்கு இவ்வளவு கோபமா என்று எண்ணியபடி, விளக்கை அணைத்து விட்டுத் தானும் படுத்து, மெல்ல அவன் தோளில் கைவைத்து, ''தனியாக மலைக்கோட்டைக்குப் போனேன் என்று கோபமா?'' என்று கெஞ்சலாக வினவினாள்.

திரும்பியே பாராமல், தோளிலிருந்த கையைத் தள்ளி விட்டுவிட்டு, ''என்னைக் கொஞ்சம் தூங்க விடுகிறாயா?'' என்றான் அவன் எரிச்சலை மறைக்காத குரலில்.

'விசுக்'கென்று தானும் திரும்பிப் படுத்துக் கொண்டாள் அவள்.

என்ன, அவள் ஒரு பெரிய கொலை பாதகம் செய்துவிட்டது போல இப்படி ஒரு பெரிய கோபம்? சமாதானமாகப் பேசமுயன்றால், அதற்கும் முகம் திருப்பினால், அவளுக்கு மட்டும் ஆத்திரம் வராதா?

ஆனால், என்னதான் தன் பக்கமே நியாயம் இருப்பதாக அவள் எண்ணினாலும், கணவனின் கோபத்தை அவளால் தாங்க முடியவில்லை.

அவனை வைத்துத்தான் அவளுக்கு அந்த வீடே உறவாயிற்று; இப்போது அவன் வெறுப்பு காட்டும்போது, வேண்டாத இடத்துக்கு வந்த விருந்தாளி போல, எல்லாமே அன்னியமாய் முள்மேல் நிற்பது போல உணர்ந்தாள் அவள்.

தூங்கமாட்டாமல் வெகுநேரம் தவித்து விட்டு, எல்லாம் காலையில் சரியாகிவிடும் என்ற நம்பிக்கையில் ஒருவாறு கண்மூடினாள்.

ஆனால், மாதவன் கோபத்தை நாட்கணக்கில் கொண்டு செல்கிறவன் என்பதை மறுநாள் அறிய நேர்ந்தது.

விடிந்த பிறகும், பழைய மவுனச் சாமியாராகவே, தன் வேலைகளைத் தானே கவனித்துக்கொண்டு, அலுவலகத்துக்குக் கிளம்பலானான் அவன்.

அவளுடைய பிறந்த வீட்டில் எல்லாமே வெளிப்படையாகப் பேசிவிடுவார்கள். 'நீ இப்படி நடந்து கொண்டது தப்பு' 'இல்லை சரி' 'ஏன்?' 'எப்படி' என்று உடனேயே எல்லாவற்றையும் ஒளிவு மறைவின்றி விளக்கமாகப் பேசித் தெளிவு செய்துகொள்வார்கள். காரணம் புரிந்து விட்டால் அப்புறம் கோபம் எங்கிருந்து நிலைக்கும்?



'வீட்டில் அம்மாவோ, நானோ இல்லாத நேரத்தில், நீபாட்டில் கிளம்பி வெளியே போனது பெரிய தப்பு' என்று அவன் கண்டித்தால் கூட ஏற்றுக் கொள்ளலாம் போல இருந்தது அவளுக்கு. ஏற்று, மன்னிப்புக் கேட்கக்கூட அவள் தயார்தான். ஆனால், ஒன்றுமே பேசாமல், முகத்தைக் கல் மாதிரி வைத்துக் கொண்டு இருக்கும்போது என்ன செய்வது? ஒன்றும் புரியாமல் சித்ரா திண்டாடினாள்.

அலமாரியைத் திறந்தவன், அங்கே தனியாக வைத்திருந்த ராஜ்ஸ்தான் சேலையைப் பார்த்து விட்டுப் புருவம் தெரியத் திரும்பினான். ''இது ஏன் இங்கே இருக்கிறது?''

''வழக்கமாக பட்டுச் சேலைகளுடன் பீரோவில் இருப்பது. அன்றாடத் துணிமணிகள் இருக்கும் அலமாரிக்கு வரக் காரணம்?'' கேட்டான் அவன்.

பிரேமாவுக்குக் கட்டிப் பார்க்கக் கொடுத்த விவரம் அறிந்தால் இன்னமும் ஆத்திரப்படுவானோ என்று அஞ்சி, ''அ... அன்று கட்டியதில் கசங்கிவிட்டது. 'டிரைகிளீனிங்' போட எடுத்து வைத்தேன்...'' என்று அவள் விளக்கம் கூறி முடித்தபோது கணவன் முகம் இன்னமும் கடினமாகி இருந்தது.

சேலை வெளியே இருப்பதற்கே கோபப்படுகிறான்! பிரேமாவிடம் கொடுத்தது தெரிந்தால்? ஆனால் கணவனிடம் பொய்மேல் பொய் சொல்வதும் அவளுக்குக் கடினமாகவே இருந்தது.

அவனோ, 'அப்படியா?' என்று கூட ஒருவார்த்தை சொல்லாமல் வெளியேறிவிட்டான்.

இரவு பட்டினிக்குக் காலையில் பசியெடுத்து விட்டது போலும்; சீக்கிரமே உணவருந்த சென்றுவிட்டான் என்று

அவசரமாகச் சிற்றுண்டி எடுத்து வைத்தால், அதையும் அரைகுறையாகக் கொறித்துவிட்டுக் கைகழுவிவிட்டான்.

"என்ன? ஏன் சாப்பிடவில்லை? பசியில்லையா?" என்ற அவளது கேள்விகளுக்குப் பதிலே சொல்லாமல் அவன் நடக்கும் போது, பிரேமா எதிரே வந்தாள்

வந்தவள், சமய சந்தர்ப்பம் தெரியாமல், "என்ன சித்ரா, நேற்று மாலை வெளியே சுற்றியது ஜாலியாக இருந்ததா? ம்...?" என்று வெகுளியாய்க் கண்சிமிட்டிச் சிரித்தாள்.

அய்யோ என்று தலையில் அடித்துக் கொள்ளலாம் போல இருந்தது சித்ரலேகாவுக்கு.

"ம்...ம் உம்... ப...பரவாயில்லை ந...நன்றாகத் தான் இருந்தது..." என்று உளறிக் கொட்டி, கிளறி மூடிவிட்டுக் கணவன் பக்கம் திரும்பினால், அவன் போய் வருவதாகக் கூடச் சொல்லாமல் வெளியே போய்க் காரில் ஏறிக் கொண்டிருந்தான்.

ஓரக்கண்ணால் பிரேமா கவனிப்பதை உணர்ந்து, ஒன்றும் நடவாதது போலக் கணவனுக்குக் கையாட்டி விட்டு, மற்றவள் எதுவும் கேட்டு விடுமுன் அவசரமாகப் படியேறி மாடிக்கு விரைந்தாள். இவள், மாமியார் முன்னிலையிலும் போட்டு உடைத்தால் என்ன செய்வது?

அறைக்குள் சென்று கதவைத் தாளிட்டவளுக்கு அழுகை வெடித்துக் கொண்டு வந்தது.

மாதவன் அவள் மேல் மிகவும் கோபமாய் இருக்கிறான் என்ற எண்ணமே அவளுக்கு உடம்பெல்லாம் வலிப்



பது போல் இருக்கவும், ஒரு தலைவலி மாத்திரையைப் போட்டுக் கொண்டு படுத்தாள்.

ஆனால் வயிற்றில் ஒன்றும் இல்லாமல், மாத்திரை போட்டது, நெஞ்செல்லாம் எரிவது போல் ஆயிற்று.

சென்னைக்குக் 'கால்' போட்டு அன்னையிடம் பேச வேண்டும் போல இருந்தது.

ஆனால் சகுந்தலாவிடம் என்னவென்று சொல்வது? அடித்தானா, உதைத்தானா? குடித்தானா?

ஒன்றும் கிடையாது. இவள் தனியாக வெளியே போனாள் என்று முகத்தைத் தூக்கி வைத்துக் கொண்டு இருக்கிறான். அவ்வளவு தான். அவள் குறையென்று சொல்லக் கூடியது.

இதற்குப் போய் கூப்பிட்டாயா என்று அம்மாவே சிரிக்கக் கூடும். கூடவே அப்பாவின் முதல் கோபத்தைப் பற்றிக் கூறி அவளைத் தேற்றவும் கூடும்.

ஆனால், இதில் கஷ்டம் என்னவென்றால், ஹாலில் இருக்கும் போனில் தான் பேசியாக வேண்டும். அன்னபூரணி, மாலதி, பிரேமா, வேலைக்காரர்கள் என்று யார் காதிலும் அந்தப் பேச்சு விழ வாய்ப்புண்டு. அப்புறம், மாதவனுக்கும் அவளுக்கும் தகராறு என்று எப்படியும் மற்றவர்களுக்குத் தெரிந்து விடும்.

இதையெல்லாம் யோசித்து, சித்ரலேகா, தானாகவே பிரச்சினையைச் சமாளிப்பது மேல் என்ற முடிவுக்கு வந்தாள். ஆனால், இரண்டு கைகளும் நீண்டு வந்தால் தானே, பற்றிக் குலுக்க முடியும். மாதவன் தான், பின்புறமாகவே கைகளை இறுகக் கோத்து வைத்திருந்தானே!

அவனுக்காக அவள் செய்த எதையும் மாதவன் ஏற்க மறுத்தான்.

சென்றதை ஒதுக்கி, அவனோடு சித்ரலேகா சிரித்துப் பேச முன் வந்தால், அவன் பேச்சு அவன் காதில் விழுந்ததாகவே அவன் காட்டிக் கொள்வதில்லை.

''உங்களுக்குப் பிடிக்குமே என்று செய்யச் சொன்னேன்'' என்று ஏதாவது பதார்த்தத்தை எடுத்து வைத்தால் தலை கூட பாராமல் அப்படியே ஒதுக்கினான்.

அவனாகப் பேசுவதே இல்லை.

உறங்கும் நேரம் தவிர அறைக்குள் வருவதே இல்லை. அப்படி வரும் போதும், உடம்பு கழுவி வந்து நேராகப் படுத்து, கண்களை இறுக மூடிக் கொண்டு விடுவான்.

அதற்கு மேல், படுக்கையைப் பயன்படுத்தி அவனை நெருங்க அருவெறுத்து, அவளும் பேசாதிருந்து விடுவாள்.

பத்து நாட்களாக மாதவனின் உதாசீனத்தை அனுபவித்த சித்ரலேகாவுக்கு இனி இதைச் சகிக்க முடியாது என்று தோன்றியது.

இந்த உதாசீனம், அவளது பிழைக்கான தண்டனை மட்டுமாய் இருக்க முடியாது. வேறு காரணம் இருக்க வேண்டும் என்று எண்ணியவளுக்குப் பயங்கரமான சந்தேகம் ஒன்று தோன்றி மேனி நடுங்க வைத்தது.

பல்வேறு கூற்றுகளை ஆராயும் போது, அந்த பயம் உறுதிப்படவும், இனி, இதை, இப்படியே விடுவது சரியல்ல என்ற முடிவுக்கு வந்தாள்.

அன்று மாதவன் படுக்க வரும் போது அவனைத் தடுத்து நிறுத்தி, ''நான் வளர்ந்த சூழ்நிலையில், எனக்குச் சாதாரணமாகத் தோன்றுகின்ற ஒன்று இந்த வீட்டு வரைமுறைக்குப் பிழையாகவே தோன்றலாம். ஆனால், கோயிலுக்குத் தனியாகப் போய் வந்ததற்காக நீங்கள் என்னிடம்



இவ்வளவு வெறுப்பு காட்டுவது நியாயமாக எனக்குப் படவில்லை...'' என்று தொடங்கினாள்.

ஒரு வெகுமூச்சுடன், அவளைப் பார்வையால் உறுத்து விட்டு அவளைச் சுற்றிக் கொண்டு செல்ல முயன்றான் மாதவன்.

என் அன்புக் கணவன் இவனே தானா என்றிருந்தது அவளுக்கு. கண்ணைக் கரித்ததை அடக்கிக் கொண்டு, அவன் கையைப் பற்றி நிறுத்தி, ''இதோ பாருங்கள், இப்போது நீங்கள் என்னிடம் பேசாவிட்டால், நான் நாளைக்கு அத்தையிடம் எல்லாம் சொல்லி நியாயம் கேட்பேன்'' என்று மிரட்டினாள்.

வெறுப்புடன் உதறி, அவள் பிடியிலிருந்து கையை விடுவித்துக் கொண்டான் அவன். எகத்தாளமாக நோக்கி, ''எல்லாமே... சொல்லி நியாயம் கேட்பாயா? மோகினிப் பிசாச போல அலங்கார சொரூபமாக, ஓட்டல் அறையில் ஆசைக் காதலனோடு கொட்டம் அடித்தது: அதைப் பூசி மெழுக கோயிலுக்குப் போனதாகப் புளுகியது எல்...லாமே சொல்லி விடுவாயா? பரவாயில்லை. உனக்குத் தைரியம் அதிகம் தான்!'' என்று மெச்சுவது போலக் குட்டினான்.

பிரமித்துப் போனாள் சித்ரலேகா, ''ஓட்டலா! அங்கே நான் கொட்டம் அடித்தேனா? நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?'' என்று புரியாமல் கேட்டாள்.

''ஆகாகா...! என்ன நடிப்பு! அப்படியே உத்தமி ரத்தினம் தான். ஒன்று செய். யாரையாவது பிடித்து, எப்படியாவது ஒரு சினிமாவில் நடித்து விடு. அப்புறம் அடுத்த ஆஸ்கார் பரிசு நிச்சயமாய் உனக்குத் தான்'' என்று நக்கல் செய்தான் மாதவன்.

அவன் பேசிய பாணி அவளுக்கு சிரைமூட்டிய போதும், அதை அடக்கிக் கொண்டு, "மெய்யாகவே நான் எந்த ஓட்டலுக்கும் போகவில்லை, மாது. மலைக் கோட்டையில் தாயுமானவர் கோயில் பிரகாரத்தில் தான் நின்று கொண்டு இருந்தேன். உங்களிடம் யாரோ தவறாக சொல்லியிருக்கிறார்கள்" என்று முடிந்த அளவு நிதானத்துடனேயே விளக்க முயன்றாள் சித்ரலேகா.

ஆனால், "அந்தப் பொய்யையே திருப்பித் திருப்பிச் சொல்லிக் கொண்டு இருந்தாயானால் பெண் என்றும் பாராமல் அறைந்து விடுவேன்" என்று கோபமே உருவாக அவன் சீறவும் திகைத்துப் போனாள்.

மாதவனின் பேச்சில், செய்கைகளில், தொடுவதில் கூட ஒரு மென்மை இருக்கும். இந்தப் புருவ நெளிப்பும், கோபக் குரலும், 'அடிப்பேன்'என்ற பேச்சும் அவளால் நம்ப முடியாதவையாக இருந்தன.

அதிலும் இப்படி ஓர் அநியாயப் பழியை அவள் மேல் சுமத்துகிறானே!

"ஒன்று சொல்லுங்கள். அப்படி எந்த ஆசைக் காதலனைச் சந்திக்க நான் ஓட்டல் அறை வரை போனேன் என்கிறீர்கள்?" என்று அழுத்திக் கேட்டாள் அவள். இல்லாத காதலனை இவன் எங்கிருந்து கொண்டு வருவான் என்பது அவளுக்கு.

ஆனால், "எந்தக் காதலனா? அப்படி எத்தனை பேரம்மா உனக்கு இருக்கிறார்கள்? ஏமாளிக் கணவன் எனக்குத் தெரிந்ததெல்லாம் அந்தப் பிரதீபன் ஒருவன் தான் தாயே!" என்று பலமாகத் திருப்பியடித்தான் மாதவன்.

'பிரதீபனா!"



பிரதீபனின் பெயரைத் தன்னோடு இப்படி ஒருவர் கீழ்த்தரமாக இணைத்துப் பேசக் கூடும் என்று சற்றும் எதிர்பார்த்திராத சித்ரலேகா அதிர்ந்து போனாள்.

## 6

பிரதீபனின் பெயரை மாதவன் குறிப்பிடவும், சித்ரலேகாவுக்குத் தலை சுற்றி விட்டது.

ஓர் அன்பான தோழியின் அண்ணன்! அவளுக்கும் அண்ணனைப் போன்றவன்! அவனோடு அவளை இணைத்து... சேச்சே!

ஆனால், "பிரதீபனே தான். அவனைத் தான் நீ அன்று ஓட்டல் கோகுலத்தில் சந்தித்து... சே, சந்தித்து விட்டு, மலைக்கோட்டைக்குச் சென்றாகக் கதை அளக்கிறாய்" என்று அழுத்தத்துடன் உரைத்தான் மாதவன்.

உண்மை போலச் சொல்லுகிறானே!

ஒருவேளை யாராவது கலகமூட்டி வேலைமெனக் கெட்டு அவனிடம் வந்து ஏதாவது சொல்லி, அதை நம்பிக் கொண்டு இப்படிப் பேசுகிறானோ?

அன்று போனில் பேசிய கம்மல் குரல் சட்டென அவளுக்கு ஞாபகம் வந்தது. குரல் இயல்பிலேயே கம்மியதா அல்லது... ரிசீவரின் வாய் மேல் ஏதாவது துணியைப் போட்டுக் கொண்டு பேசினால் கூடக் குரல் கம்மினாற் போலக் கேட்கும் என்பது நினைவு வரவும், திடுமென அவளுக்கு ஒரே பயமாகி விட்டது.

யாரோ வேண்டும் என்று அவளைக் கோயிலுக்கு வரவழைத்து விட்டு இவனிடம் வேறு மாதிரி உருவேற்றி விட்டிருக்கிறார்கள்!

அதற்கு மேல் கணவனிடம் எதை மறைப்பதும் பெரும் தவறாகி விடும் என்று கருதி, ''நான் சொல்வதைக் கொஞ்சம் பொறுமையாகக் கேளுங்கள், மாது. அன்று நான்...'' என்று சற்றுக் கெஞ்சுதலாகத் தொடங்கி நடந்ததை எல்லாம் ஒன்று விடாமல் சொன்னாள். பிறகு, ''அன்று நான் பிரதீபனைச் சந்திக்கச் சென்றது மெய்யே. ஆனால், அது ஜோதிக்காகத் தான். வேறு எந்தத் தவறான காரணத்திற்காகவும் அல்ல. அத்தோடு இதில் யாரோ ஏதோ சூது செய்திருப்பதாக எனக்குத் தோன்றுகிறது. ஏனென்றால், பிறகு விசாரித்த போது, பிரதீபன் காலையிலேயே அவர் தங்கியிருந்த அறையைக் காலி செய்து கிளம்பி விட்டதாக அவர் தங்கியிருந்த ஓட்டலில் சொன்னார்கள். அந்த ஓட்டல் பெயர் சுபம். கோகுலம் அல்ல. அங்கே நான் போகவும் இல்லை!'' என்று முடித்தாள் அவள்.

ஆனால், அவள் எதிர்பார்த்தது போல, அவளோடு அமர்ந்து, சூழ்ச்சி செய்தது யாராக இருக்கும் என்று ஆராயாமல், கிண்டலாக கைத் தட்டினான் அவளுடைய கணவன்.

''கற்பனை பிரமாதம். நீ நடிப்பதோடு, சினிமாவுக்கும் கதையும் கூட எழுதலாம்! இரட்டைப் பரிசு கிடைக்கும்!'' என்றான் தொடர்ந்து.

''ஓட்டல் சுபத்தில் காலி பண்ணி விட்டு, அன்று கோகுலத்தில் அவன் ரூம் போட்டதற்கு ரெக்கார்டு இருக்கிறது தாயே!''



''நான் சொல்வது எல்லாம் உண்மை மாது. ஜோதியுடைய அண்ணன் எனக்கும் அண்ணன் போலத் தான்'' என்று எவ்வளவோ சொல்லிப் பார்த்தாள் அவள்.

அவன் காதில் வாங்குவதாக இல்லை. ''அது தான் 'லேகா லேகா' என்று கொஞ்சினானாக்கும்!'' என்று ஏளனம் செய்தான்.

''என் வகுப்பில் இன்னொரு சித்ரலேகா உண்டு. அவளைச் 'சித்ரா' என்றும் என்னை 'லேகா' என்றும் தான் கல்லூரியில் எல்லாருமே அழைப்பது'' என்றாள் சித்ரலேகா மரத்த குரலில்.

''சும்மா சொல்லக் கூடாது. வினாடி தயங்காமல், உடனுக்குடன் வெகு அழகாக சமாளிக்கிறாய்!'' என்று பாராட்டுவது போல மட்டம் தட்டினான் மாதவன்.

''நான் உண்மையைத் தான்...'' என்ற மனைவியின் பேச்சை அசட்டை செய்து, ''கத்தரிக்காயில் நெய் வடிகிறது என்று சாதித்து, அதை எல்லோரையும் நம்பவும் வைத்திருப்பாய். ஆனால், உன் கெட்டகாலம், 'கோகுல'த்தில் உன்னைப் பார்த்ததற்கு நம்பகமான சாட்சிகள் இருக்கிறார்கள்!'' என்று முடித்தான்.

''எப்படி இருக்க முடியும்?'' என்றாள் அவள் நம்ப மாட்டாமல்.

''ஆமாம், ஆமாம்! எப்படி இருக்க முடியும்? நீ எவ்வளவு கவனத்துடன் ஒளிவுமறைவாய் முகம் மறைத்து ஓட்டலுக்கு வந்து போனாய்! அப்படியிருந்தும் உன்னை யாரால் இனம் கண்டிருக்க முடியும்?'' என்று அவளோடு கூடச் சேர்ந்து வியந்தான் அவன்.

''ச்சு... அதல்ல. நான் மெய்யாகவே அந்த ஓட்டலுக்குப் போகவே இல்லை, மாது யாரோ பொய்யாக...''

"ஏய்...!" என்று ஆத்திரத்துடன் அதட்டினான் மாதவன். எவ்வளவு தைரியமாய்ப் பொய் மேல் பொய்யாகச் சொல்லிக் கொண்டே இருக்கிறாய்? உன்னை ஓட்டல் கோகுலத்தில் பார்த்தது வேறு யாரும் இல்லை. நானே தான்! நீ என்னிடம் இல்லை என்று சாதிக்கிறாயா?" என்று உறுமினான் அவன்.

"அதெப்படி முடியும்" என்றாள் அவள் மீண்டும். "நான் அங்கே செல்லவே இல்லாத போது உங்களால் என்னை அங்கே எப்படிப் பார்த்திருக்க முடியும்?" என்றாள் புரிந்து கொள்ள மாட்டாமல்.

மாதவனின் கை முஷ்டிகள் இறுகின. "நானே நேரில் உன்னைப் பார்த்தேன் என்கிறேன்; மீண்டும் பழைய பாட்டையே பாடுகிறாயே? கவனி. பத்து நாட்களாக அடக்கி வைத்துக் கொண்டிருக்கும் ஆத்திரம் இது. இன்னொரு தரம் இல்லை என்றாயானால் உன்னை அறைந்தே கொன்றாலும் கொன்று விடுவேன்" என்றான் அவன் கடித்த பற்களுக்கிடையே.

கோப வெறியில் கன்றிச் சிவந்திருந்த கணவனின் முகத்தை வெறித்து நோக்கினாள் சித்ரலேகா.

தன் தோலுக்கும், அதையடுத்த எலும்புகளுக்கும் உள்ளே ஒன்றுமே இல்லாமல் வெறும் கூடாகி விட்டது போல அவளுக்கு ஒரு பிரமை உண்டாயிற்று.

இப்படி ஒரு பொய்யை, இவ்வளவு சினம் காட்டிச் சொல்வது என்றால்... அவளது சந்தேகம் நிச்சயமாகச் சரியானது தான். அப்படித்தான் இருக்க வேண்டும்.

நாத்தனார் பெண்ணின் திருமணம் பற்றிச் சென்ற அன்னபூரணி, அங்கே பிரேமாவுக்கு ஒரு மாப்பிள்ளையும்



சேர்த்துப் பார்த்து வந்து சரியாகப் பத்து நாட்கள் தான் ஆகின்றன.

பிரேமாவுடைய பெற்றோருக்கு வரன் பிடித்தாயிற்று. மாதவனுக்கு ஏற்கனவே பிரேமாவின் மேல் உள்ளூர மையல் இருந்திருக்க வேண்டும். ஆனால், வீட்டுக் கீரையின் மதிப்பு புரியாதது போல, அருகில் இருந்தவளும் பெரிதாகத் தோன்றவில்லை. 'மெட்ராஸ் பெண்' என்கிற மயக்கம் வேறு. சித்ரலேகாவுக்கு தாலி கட்டி விட்டான்!

ஆனால், பிரேமா வேறொருவன் சொத்தாகி விடப் போகிறாள் என்ற உடனே அவள் அருமை தெரியத் தொடங்கி விட்டது. கிட்ட இருந்த கனியை விட்டு விட்டோமே என்ற தவிப்பில் மனைவியாய் இருந்து, நந்தியாய் வழி மறிக்கும் இவள் மேல் ஆத்திரம் பொங்குகிறது. இல்லாத பழியெல்லாம் ஏற்றி விரட்ட முயற்சிக்கிறான்!

"நினைத்ததைச் சொல்லி, பிரேமா மேல் ஆசையென்றால் அதற்காக என்மேல் இல்லாத பழி சுமத்தி விரட்டப் பார்க்கிறீர்களா?" என்று அவள் ஆத்திரத்துடன் பேசிக் கொண்டிருக்கும் போதே, அவன் கொதிப்புடன் அவளைப் பற்றி விட்டான்!

"யாரடி பொய் சுமத்துவது? மாட்டிக் கொண்டு விட்டோமே என்று வாயில் வந்ததை உளறிக் கொட்டுவது நீயா, இல்லை நானா? இனி ஒரு தரம் இப்படிப் பேசுவாயா? பேசுவாயா?" என்று அவளை உலுக்கி எடுத்தான்.

புயல் காற்றில் அலையும் கொடியாய்த் தடுமாறியவளை தன் கைப் பிடியில் நேராக நிறுத்தி, "உன்னை மலர்மாலையாக மதித்து நடத்தினேன். ஆனால், சில பெண்களுக்கு முரட்டுத்தனம் தானே பிடிக்குமாம்? அதற்காகத் தான் உனக்கு வேறு தேட்டம் வந்ததா? இதோ, இதற்கா

கவா?'' என்று அவளை அலையக் குலைய இழுத்து முரட்டுத்தனமாக முத்தமிட்டான்.

''இது போதுமா? சொல்லு!'

''இல்லை...'' என்று திமிற முயன்றவளை அவன் விடுவதாக இல்லை.

''இது போதுமா? இது போதுமா?'' என்று ருத்ரி எடுத்து விட்டான்!

தோற்று, ஓய்ந்து, சுருண்டு கிடந்த மனைவியைப் பார்க்கும் போது மாதவனுக்கு ஒரு மாதிரி இருந்தது.

இப்படி எல்லாம் கை மீறி ஏதாவது நடந்து விடக் கூடும் என்று தான் அவன் பத்து நாளாக விலகி ஒதுங்கிப் போய்க் கொண்டிருந்தான்.

அத்தோடு விடாமல் பிடிவாதமாய் இழுத்துக் கொண்டவள் அவள் தானே?

ஆனால், அவளது பிழைக்குச் சரியான தண்டனை கொடுத்து விட்டதாகத் திருப்தியுறவும் அவனால் முடியவில்லை.

ஒரு பெண்ணிடம்— அதுவும் மனைவியிடம் — கணவன் நடந்து கொள்ளும் முறை அதுவல்ல. அந்த மாதிரி அவன் வளர்க்கப்படவும் இல்லை.

அவள் என்ன தான் தவறிழைத்திருந்த போதும் இது அதிகப்படியான தண்டனை தான்.

என்னவோ, இன்னமும் சித்ரா நடத்தை தவறிப் போயிருப்பாள் என்று அவனால் நம்ப முடியவில்லை.

ஏதோ பழைய காதலின் வேகத்தில், அந்தப் பிரதீபனை அவள் காணச் சென்றிருக்கலாம். அதைக் கூட மன்னித்து விடலாம்.



ஆனால், அவளது பிடிவாதமான பொய் தான் அவனுக்கு வெறியைக் கிளப்பி விட்டு விட்டது. எண்ணாததை எல்லாம் சொல்லி ஏதேதோ செய்ய வைத்து விட்டது!

அவ்வப்போது சிறுவிசிப்புகள் உடலைக் குலுக்கச் சோர்ந்து கிடந்தவளைப் பார்க்க மனம் சுட்டது.

விலகிச் சென்று, பால்கனிக்குச் சென்று அமர்ந்து இருண்ட வானத்தை வெறித்தான்.

கீழ்த் திசையில், லேசாக இருள் குறைந்து கொண்டிருந்தது. விடியலின் அறிகுறி! ஆனால், அவன் வாழ்வு தான் ஒரே இருட்டு மயமாகி விட்டது!

அன்று வாடிக்கையாளரோடு பேசி முடித்து விட்டு, 'கோகுல'த்தின் காபி கடையிலிருந்து அவரோடு வெளியே வந்த போது, அவனுக்குத் தான் எப்படித் தூக்கி வாரிப் போட்டு விட்டது! எப்படிப்பட்ட அதிர்ச்சி அது!

அங்கே சித்ரலேகா! அவனது அன்புப் பரிசான அந்த ராஜஸ்தான் சேலையில்... அவன் மனைவி இங்கே எங்கே வந்தாள்?

வந்தவள், நின்று அவனோடு பேசாமல், விரல்களால் முகம் மறைத்தபடி மாடிப்படி ஏறி ஓடுவானேன்?

ஒருவேளை அந்தப் பெண் சித்ரலேகா அல்லவோ?

அந்தச் சேலை... அதுபோல இன்னொன்று கூட நெய்திருக்கலாமே!

சேலை நெய்திருக்கலாம். ஆனால் அந்த நகப்பூச்சு தூக்கிக் கட்டிய கூந்தல் அலங்காரம்; அதில் அந்த அலங்காரக் 'கிளிப்?'

எல்லாவற்றுக்கும் மேலாக, அந்தக் கச்சிதமான உடல் அமைப்பு?

இங்கு வந்து குண்டடித்து விட்டேன். அம்மா வீட்டில் பார்த்தால் சிரிப்பார்கள். மெலிய வேண்டும் என்று அவள் சொல்ல, மெலிகிறேன் என்று பட்டினி கிடந்து இந்த அழகைக் கெடுத்தால், அப்புறம்!' என்று அவன் மிரட்டிப் பாதுகாத்த வடிவழகு?

சேலை சற்று மொட மொடப்பாய் 'ஆர்கன்சா' மாடல் என்றாலும், அவளை அவன் அறிய மாட்டானா?

அவளைப் பின் தொடர மாட்டாமல், வாடிக்கையாளர் கூடவே இருக்கவும், கவனத்தை அவரிடம் திருப்பினான்.

ஒரு வழியாக அவர் விடைபெற்றுச் சென்றதும் ஓடிச் சென்று மாடி ஏறிப் போனான். அடுத்த மாடி, அடுத்த மாடி என்று அந்தப் பத்துமாடிக் கட்டிடத்தில், வெளியே எங்கேயும் அவளைக் காணவே இல்லை.

ஒவ்வொரு மாடியிலும் படிகளையும், 'லிப்டை'யும் அடுத்து இருபுறமுமாய் அமைந்திருந்த பல அறைகளில் ஏதாவது ஒன்றில் தான் அவள் இருக்க வேண்டும்! ஆனால், அது எந்த அறை என்று தெரியாமல், அத்தனை அறைகளையும் தட்டித் திறந்து பார்க்கவா முடியும்?

சரி, எதுவானாலும் இரவு சொல்வாள் என்ற நிச்சயத்துடன் தான் அங்கிருந்து கிளம்பினான்.

அப்போதும் ஒரு சிறு சந்தேகம். ஒருவேளை அவள் இல்லையோ?

உடனேயே வீட்டுக்கு போன் செய்து அவளைக் கேட்டான். சின்னச் சின்னம்மா வெளியே போயிருப்பதாகப் பதில் கிடைத்தது.

அப்போதும், வீடு போனதும் விவரம் சொல்வாள் என்று எவ்வளவு உறுதியோடு இருந்தான்.



ஆனால், அவள் ஒன்றுமே சொல்லாமல் கமுக்கமாக இருந்து விட்டாளே!' கோயிலுக்குப் போனதாகக் கதை வேறு!

கடைசியாக விவரம் கிடைத்தது பிரேமாவிடம் இருந்து தான்!

அந்தப் பெண் பாவம், வெறும் வெகுளி! தோட்டத்தில் உலவிக் கொண்டு இருந்தவள், அவனைப் பார்த்ததும், கேலி தான் பேசினாள். "என்ன, ஓட்டல் கோகுலத்தில் இருவரும் கண்ணாமூச்சி ஆட்டம் ஆடினீர்களாக்கும்! ஆளுக்கொரு பக்கம் ஓடிக் கொண்டு இருந்தீர்களே! பத்தாவது மாடியில் அறை ஏற்பாடு செய்திருந்தீர்களா? அங்கே இருந்து பார்த்தால், கொள்ளிடமும் காவேரியும் அழகாகத் தெரியும் என்று நானும் என் சினேகிதியும் நின்று பார்த்துக் கொண்டு இருந்தோம். சித்ரா ஓடி வந்து அறைக்குள் புகுந்து கதவை மூடிக் கொண்டதைப் பார்த்தேன். பிறகு பார்த்தால் நீங்கள் தேடிக் கொண்டு இருந்தீர்கள். சரிதான்ப்பா, ஏதோ காதலர் விளையாட்டு! இதில் முந்திரிக் கொட்டையாய்த் தலையை நீட்டுவது தப்பு என்று ஓசைப்படாமல் திரும்பி விட்டேன். ஆனால், சித்ராவை ஆட்டோவில் தனியாக ஏன் அத்தான் அனுப்பினீர்கள்? அத்தை பார்த்தால் திட்ட மாட்டார்கள்?" என்று அவள் பாட்டில் வளவளத்து வைத்த போது, சித்ராவை அவன் கோகுலத்தில் பார்த்தது தவிர வேறு எதுவும் அப்போது அவனுக்குப் புரியவில்லை...

ஏனெனில் அப்போதும் அவன் தன் மனைவியைத் தவறாக எண்ணவே இல்லையே!

அவன் மலைக்கோட்டை அது இது என்று தட்டுத் தடுமாறிய போது தானே சந்தேகம் தலைநீட்டி, பிரதீபன் 'கோகுல'த்தில் அறை எடுத்திருந்ததை அவன் விசாரித்து அறிந்ததே!

சேலை, கட்டியதில் கசங்கி விட்டதாம்!

கட்டியதில் கசங்கியதா...? கட்டியிருந்த போது அவன் கட்டிப் பிடித்ததில் கசங்கியதா?

சேச்சே! இப்படிப் பாமரத்தனமாக நினைத்திருக்கக் கூடாது. 'பார், என் கணவர் இதெல்லாம் வாங்கித் தந்திருக்கிறார்' என்று பிரதீபனிடம் காட்டுவதற்காகக் கூட அந்தச் சேலை அலங்காரத்தோடு அவள் அங்கே சென்றிருக்கலாம்.

ஆனால், இல்லவே இல்லை என்று அந்தப் பொய் தான்...

அப்படியே அவன் சற்று நேரம் கண்ணயர்ந்திருக்க வேண்டும். கேட் திறக்கும் சத்தத்தில் திடுமென விழித்துப் பார்த்தால், நிதானமற்ற நடையுடன், கேட்டைத் தாண்டிச் சென்று கொண்டிருந்தவள், சித்ரலேகா! அவன் மனைவி!

இந்த விடிகாலை வேளையில் எங்கே செல்கிறாள் என்று யோசிக்கும் போதே, அந்த விடை அவனை உறுத்தவும், அறையின் உள்ளே ஓடி, ஒரு கையில் சட்டையை எடுத்து மாட்டிக் கொண்டபடியே ஓட்டமும் நடையுமாக விரைந்தோடி வந்து, மனைவியைத் தொடர்ந்தான்.

என்னவோ, தூக்கத்தில் நடப்பவள் போல நடுரோட்டில் நடந்து கொண்டு இருந்தாள் அவள்.

எங்கோ ஏதோ வாகனம் வருகிற ஓசை கேட்டது.

''சித்ரா'' என்ற கூவலுடன் அவன் ஓடிச் சென்று அவளை அடையுமுன், அந்த வெண்ணிற மாருதி சித்ராவை இடித்துக் கீழே தள்ளி விட்டது.



# 7

நல்லவேளையாக, அந்த மாருதியில் வந்தவர் மனிதத் தன்மை உள்ளவராக இருந்தார். இடித்துத் தள்ளி விட்டு ஓட்டமாய் ஓடி விடாமல், இறங்கி வந்து, அடிபட்டு விழுந்தவளுக்கு என்ன ஆயிற்று என்று பார்த்தார்.

அதற்குள் விபத்து நடந்த இடத்தை நெருங்கி விட்டமாதவன், மனைவியின் உடம்பில் எலும்புகள் ஏதும் உடைந்திருக்கிறதா என்று பரிசோதித்து விட்டு, 'சித்ரா, சித்ரா' என்று அவளை அழைத்தான்.

வந்தவன், வண்டியில் அடிபட்டவளுக்கு உறவினர் என்பதை அறிந்ததும், ''நடுத்தெருவில் வந்து விட்டார்கள் சார், விலகுவார்கள் என்று பார்த்தேன். இல்லை என்று தெரியவும், வேகத்தை அடியோடு குறைத்து விட்டேன். அப்படியும் இடித்து விட்டது'' என்று புலம்பினார் கார்க்காரர்.

''உங்கள் தப்பு ஒன்றும் இல்லை சார். நானும் பார்த்துக் கொண்டு தான் வந்தேன். ஒரு சின்ன உதவி செய்கிறீர்களா? பக்கத்தில் தான் எங்கள் குடும்ப டாக்டர் வீடு. அதுவரை, அழைத்துப் போக உதவினீர்கள் என்றால்...''

''அய்யோ... வாருங்கள் சார்... வாருங்கள் சார். இது கூடச் செய்ய மாட்டேனா? அம்மாவைத் தூக்குங்கள்....'' என்று சித்ராவைக் காரில் ஏற்றி டாக்டர் வீட்டில் சேர்த்து விட்டுப் போனார் அவர்.

சித்ரலேகாவைப் பரிசோதித்து விட்டு, ''அடி ஒன்றும் பலமில்லை. ஆனால்...'' என்று இழுத்தவர், குற்றம்சாட்டும் பார்வையுடன், ''நீ அவளை என்ன செய்தாய்? முகம், உடம்பெல்லாம் வேறு மாதிரிக் கன்றல் தெரிகிறது? 'பொய்

யில்லை; நம்புங்கள்' என்று மயக்கத்திலும் முனகுகிறாள். இனி, அவளுக்கு வைத்தியம் செய்ய வேண்டியது நீ தான். போ... போய்ப் பார்... கொஞ்சம் பொறு... வீட்டுக்கு, உன் அம்மாவுக்கு தெரியுமா?'' என்று விசாரித்தார்.

தலைகுனிந்து நின்று, ''இல்லை டாக்டர். எங்களுக்குள் ஒரு சிறு மனவேறுபாடு... வீட்டில் ஒருவருக்கும் தெரியாது. இருவரும் காலை 'வாக்கிங்' வந்த போது வேகாக அடிபட்டு விட்டதாகச் சொல்லப் போகிறேன்... இப்போது அவளிடம் போகிறேன்'' என்று உள்ளே சென்றான்.

வெயிலில் பிடுங்கி எறியப்பட்ட கொடி போல கிடந்த மனைவியைப் பார்க்கும் போது அவனுக்கு நெஞ்சில் வலித்தது.

அருகில் அமர்ந்து மெல்ல நெற்றியை வருடி விட்டான்.

சிப்பி இதழ்கள் மெல்லத் திறக்க, அவனை நோக்கியவ ளின் விழிகளில் நீர் பெருகியது. ''நீங்கள் நம்பவில்லையே! நான் மெய்யாகவே...'' என்றவளின் உதட்டில் விரல் வைத்து பேச்சைத் தடுத்தான் கணவன்.

''உஷ்...அழக் கூடாது. எல்லாம் சரியாகி விட்டது. தூங்கு'' என்றான்.

அவன் கையைப் பற்றியவாறே சித்ரலேகா உறங்கி விட அவளையே பார்த்தபடி மாதவன் அமர்ந்திருந்தான்.

இந்த நிலையிலும் இப்படிப் புலம்புகிறவள் சொல்வது பொய்யாக இருக்க முடியாது!

ஆனால் அவளை அவனே பார்த்தானே?

இல்லை; அவளை அல்ல. அந்தச் சேலையை மட் டுமே. அது அந்தச் சேலை போன்ற இன்னொன்றாக இருக்கலாம். உலகம் சிறியது என்பதற்கிணங்க, அந்த



இன்னொரு சேலைக்காரி அதை இங்கேயே கட்டிக் கொண்டு வந்திருக்கலாம்! அந்தப் பெண்ணின் உடல் அமைப்பு கூட இவள் மாதிரியே இருந்திருக்கலாம். அப்ப டித்தான் இருக்க வேண்டும்!

உற்சாகத்துடன் துள்ளி எழுந்தவன், உடனே சோர்ந் தான். சித்ராவைப் பார்த்தது அவன் மட்டுமில்லையே! பிரேமாவும் பார்த்தாளே!

பார்த்தது மட்டுமின்றி, அவன் முன்னிலையிலேயே சித்ராவிடம் அது பற்றிக் கேட்க வேறு செய்தாளே!

அவன் முன்னிலையில்...

பிரேமா, அண்ணி மாலதியுடைய தங்கை என்கிற உறவால் சற்று உரிமையோடு கேலி செய்வாள்.

மற்றபடி, அவர்கள் வீட்டில் வேறு எண்ணம் இருந்தது பிற்பாடு தெரிய வந்தது... ஒரு வேளை...

பிரேமாவும் சித்ராவும் ஒரே நிறம். ஒரே உயரம் தான். சித்ராவுக்குச் சற்று சதை போட்டு விட்ட பிறகு உடல் அமைப்பும் ஒன்று தான். கூந்தல் கூட, பிரேமா இப்போது தான் கொஞ்சம் கட்டையாக வெட்டி விட்டிருக்கிறாள். முன்பு கூந்தல் நீளமும் ஒரே அளவு தான்....

அவனது கைப்பிடி மட்டுமே துணையாக, அமைதி யாக உறங்கும் மனைவியைப் பார்த்தான்.

அவளது உறக்கம் கலையாதபடி, மெல்லக் கையை விலக்கிக் கொண்டு எழுந்தான்.

மருத்துவரை அணுகி, ''வீட்டில் போய்ச் சொல்லி விட்டுக் கார் எடுத்து வந்து அழைத்துப் போகிறேன், சார். பார்த்துக் கொள்ளுங்கள்'' என்று கூறி விட்டுக் கிளம்பி னான்.

பொழுது இன்னமும் முழுமையாக விடியவில்லை. எனவே வீட்டில் அதிக நடமாட்டமும் இல்லை.

இந்த நேரம் பிரேமா, மாடியில் கீழ்ப்புற வராந்தாவில் சூரியனின் இளம் கிரணங்களுக்காக மூடிய விழிகளுடன் காத்து நிற்பாள். அப்படிக் கிரணங்கள் படும்படி சில நிமிடங்கள் நின்றால் கண் அழகும், பார்வையும் கூடும் என்று எதிலோ படித்தாளாம்.

அழகுக்காக என்றால் எதையும் செய்கிறவள் ஆயிற்றே! அழகுக்காக மட்டும் தானா?

அவன் எதிர்பார்த்தது போலவே, பிரேமா அங்கு தான் இருந்தாள்.

அவனைப் பார்த்ததும் புன்னகை செய்தவளிடம், "ஏன் அப்படிச் செய்தாய், பிரேமா?" என்று அமைதியாகக் கேட்டான் மாதவன்.

புரியாத பாவனையில் விழிகளை அகல விரித்தாள் பிரேமா.

அவளை நேராக நோக்கி, "அன்று ஓட்டலுக்கு அந்த ராஜுஸ்தான் சேலையைக் கட்டிக் கொண்டு வந்து, சித்ரா போல நடித்து, எனக்கு முகம் மறைத்துச் சென்றது. பிறகு அவளை அங்கே பார்த்ததாக என்னிடம் புளுகியது, போன் வாயில் துணி போட்டுக் கம்மல் குரலில் பேசி, சித்ராவை மலைக்கோட்டைக்கு வரவழைத்து அலைக்களித்தது..." என்று அடுக்கினான் அவன்.

"இப்படியெல்லாம் அவள் புளுகினாளா?" என்று ஏளனமாய் கேட்டாள் பிரேமா.

இவள் எதையும் ஒத்துக் கொள்ளப் போவதில்லை என்பதை உணர்ந்து, ஒரு கதை விட்டான் அவன்.



"கோகுலத்தில் பிரதீபன் பெயரில் நீ அறை ஏற்பாடு செய்ததற்கும், அந்த அறையில் நீ மட்டுமே இருந்து விட்டு, அறை வாடகையைக் கொடுத்ததற்கும் சாட்சி இருக்கிறது. இப்போது நடந்ததை நீயாக ஒத்துக் கொள்கிறாயா? அல்லது, நாளைக்கு உனக்குப் பூ வைப்பதற்காக இங்கே வரப் போகிறார்களே, அமெரிக்க மாப்பிள்ளை குடும்பம், அவர்கள், உன் பெற்றோர் எல்லோர் முன்னிலையிலும் நீ செய்ததை எல்லாம் போட்டு உடைக்கட்டுமா?" என்று மிரட்டினான் அவன்.

சற்று நேரம் பேசாமல் நின்றவள், மாதவன் இளகுவ தாக இல்லை என்பது புரியவும் வேறு வழியின்றி, ஒருவாறு எல்லாவற்றையும் ஒத்துக் கொண்டாள்.

ஒரு சிறு அமைதியின் பின், "என்ன பிழை செய்து விட்டாய், பிரேமா! அதுவும் உன்னை ஒரு மகளாகவே நடத்தும் இந்த வீட்டில்... சரி, சரி... நடந்தது நடந்து விட்டது. ஆனால் இனி, நாளை பூ முடிப்பின் பின் தயவுசெய்து உன் பெற்றோருடன் தஞ்சைக்குச் சென்று விடு. இல்லையென்றால் உன் நாடகத்தை நம்பி, இந்தப் பத்து நாளாக நான் என் மனைவிக்கு செய்த கொடுமைக்கு, என்னை மீறி நான் ஏதாவது சொல்லிவிடக் கூடும்" என்று முடித்து விட்டுத் தாயை நாடிச் சென்றான்.

இருவரும் 'வாக்கிங்' போன போது சிறு விபத்து. இப்போது ஒன்றும் இல்லை; எனவே காரை எடுத்துப் போய் அவளை அழைத்து வருவதாகச் சொல்லி விட்டுக் காரோடு போனான்.

"வீட்டிலேயே 'வாக்கிங்' போகக் கூடாதா?" என்று புலம்பினாள் அந்த அம்மா.

சித்ரலேகா விழித்து விட்டிருந்தாள். ஆயினும் டாக்டரின் உத்தரவுப்படிப் பேசாமல் படுத்துக் கொண்டிருந்தாள்.

டாக்டரிடம் பேசி விட்டு, மாதவன் உள்ளே வரவும் மருண்ட விழிகளால் அவனைப் பார்த்து விட்டுப் பார்வையைத் தாழ்த்திக் கொண்டாள்.

விழிக்கடை ஓரமாய், இரு பெரிய நீர்மணிகள் உருண்டு ஓடுவதைக் காணவும் கணவனுக்கு ஒரேயடியாய் உருகி விட்டது.

சட்டென அவள் அருகே அமர்ந்து, குனிந்து அவள் நெற்றியில் மௌனமாக முத்தமிட்டு, அவள் கண்களைத் துடைத்து விட்டான்.

''கண்ணம்மா, இதோ பார், நான் உன் அசட்டுக் கணவன் வந்திருக்கிறேன். என்னை மன்னித்து ஏற்றுக் கொள்வாய் அல்லவா?'' என்று கனிவுடன் வினவினான்.

விழி உயர்த்திப் பார்த்து விட்டு, ''நான் மெய்யாகவே மலைக்கோட்டைக்குத் தான்...'' என்றவளிடம் குனிந்து, அவள் இதழ்களின் மேல் முத்தமிட்டு, அவள் பேச்சை நிறுத்தினான் அவன். ''அது தான் அசட்டுக் கணவன் என்றேனேடா? கொஞ்சமும் மூளையில்லாத ஒரு மடையனைப் போல... போல என்ன? மடையனாகவே நடந்து கொண்டு விட்டேன். இப்போது என் பத்தினிப் பெண்ணின் மன்னிப்பை நாடி வந்திருக்கிறேன். மன்னித்து, மீண்டும் என் பக்கம் இருப்பாயல்லவா, கண்மணி?'' என்று கொஞ்சலாகக் கேட்டான் மாதவன்.

இந்த அன்பு தவிர அவளுக்கு வேறு என்ன வேண்டும்?

மழைக்கால சூரியனின் கிரணங்கள், நீர்த் திவலைகளை ஊடுருவிக் கொண்டு ஒளி வீசுவது போல, விழிகளில் நீர்த் திரையுடன் சித்ரலேகா, தன் முத்துப் பற்கள் தெரிய, மோகனமாய் முறுவலித்தாள்.

# பெண் என்று பூமிதனில் பிறந்து விட்டால்...!

''கெட்டி மேளம்'' என்று உரத்த குரலில் கூறி சந்தானம் கை உயர்த்தி ஜாடை காட்டவும், தொடர்ந்து கெட்டிமேளம் உச்சஸ்தாயியில் முழங்கியது.

உறவினர்களில் முதியவர் ஒருவர் திருமாங்கல்யத்தை எடுத்து மணமகளின் கைகளில் கொடுக்க, அதை, மணமகள் வாசவியின் கழுத்தில் கட்டினான் மணமகன் கமலபதி.

சற்று ஒதுங்கினாற்போல நின்று, இந்தக் கண்கொள்ளாக் காட்சியை ஆவலுடன் கண்டு களித்துக் கொண்டிருந்த அபிராமியின் கண்களில் நீர்த்திரையிட்டு அவளது பார்வையை மறைத்தது.

அவசரமாகக் கண்களை துடைத்துக் கொண்டு நோக்கியபோது பெரும் ஏமாற்றமாய் வீடியோ படம் எடுத்த காமிராமேன் மணமக்களை அடியோடு மறைத்து விட்டிருந்தான்.

இப்படிச் சரிந்து, அப்படித் தலையை நீட்டி, எப்படி எப்படியோ முயன்றபோதும், காமிராவை முடுக்கிப் படம் எடுத்துக் கொண்டிருந்தவனைத் தாண்டி மணமக்களைப்

பார்க்க முடியாது போகவே, காமிரா மேன் நகர்வதற்கு சிறு ஏக்கத்துடன் காத்து நின்றாள் அந்த அன்னை.

அடுத்த சடங்கிற்காக, மணமகளின் அருகே வந்த சந்தானத்தின் கண்களில், தாயின் இந்தத் தோற்றம் பட்டு விட, உடனே காரணம் புரிந்து படம் எடுத்தவனைத் தோளில் தொட்டு அழைத்து ஏதோ சொன்னான்.

திரும்பி அபிராமியைப் பார்த்துவிட்டு, காமிராமேன் உடனே விலகிவிட, மீண்டும் அபிராமியால் மகளையும் மருமகளையும் ஆசை தீரப்பார்க்க முடிந்தது.

புத்தம் புதிய மனைவியின் நெற்றியில், குங்குமம் வைத்துக் கொண்டிருந்தான் கமலபதி.

கண்டு குளிர நோக்கியவள், அந்த பாக்கியம் கிடைத்த விதத்தையும் பார்த்துக் கொண்டிருந்ததால், மகனைப் பற்றி பெருமையில் அவள் நெஞ்சு விம்மியது.

இப்படி ஒரு மைந்தனை அடைய அவள் என்ன தவம் செய்திருக்க வேண்டும்!

இதை எல்லாம் பார்த்து மகிழ இவர்களுடைய தந்தைக் குக் கொடுத்து வையாமல் போயிற்றே!

அவனுடைய தந்தையின் நிலையில் நின்று, தங்கையா கிய மணமகளின் கையை, மணமகன் கையில் வைத்து சந்தானம் தாரை வார்ப்பதைக் காண்கையில் அபிராமியின் கண்கள் மீண்டும் பனித்தன.

இப்படி ஓர் அண்ணனும்தான் எந்தத் தங்கைக்குக் கிடைப்பான்!

வாசவியின் திருமணத்திற்காகச் சந்தானம் கொஞ்சமா பாடுபட்டிருக்கிறான்!



முதலில் ஒரு நல்ல மாப்பிள்ளைக்காகத் தேடிப் படாத பாடுபட்டு, குணமும், வளமும் ஒருங்கே பொருந்திய இந்தக் கமலபதியைக் கண்டுபிடித்தானே!

தந்தை கண் மூடிய உடனேயே, சொத்தையோ, பொத் தையோ யார் தலையிலாவது தங்கையைக் கட்டி விடத் தானே எல்லோரும் முனைவார்கள்.

சந்தானம் இரண்டு ஆண்டுகள் அலைந்து திரிந்து அதன் பிறகே தங்கையின் வருங்காலத் துணையாகக் கமலபதியை நிச்சயித்தான்.

''இந்தப் பையனை முதல் தடவை பார்த்ததுமே, நம் வசவுக்குப் பொருத்தம் என்று எனக்குத் தோன்றி விட்ட தம்மா,'' என்றானே!

கமலபதியைக் கண்ட பிறகும், உடனே திருமணத் துக்கு ஏற்பாடு செய்தானா? இல்லையே!

பலமுறை அவனோடும், அவனுடைய நெருங்கிய உறவினரோடும் எப்படி எப்படிப் பேசிப் பழகிப் பார்த்து விட்டு அப்புறமாய் முடிவு செய்தான்.

''பையனுடைய மைத்துனர் நம் கடைக்கு எப்போதும் வருகிற வாடிக்கையாளர். ஒரு காசு வரதட்சணை வாங்கா மல் திருமணம் செய்திருக்கிறாராம்.

ஒருநாள் பேச்சுவாக்கில் சொல்லிக் கொண்டிருந்தார். ''அப்போதே அந்தக் குடும்பத்தில் நம் வசவுக்குப் பார்க்க வேண்டும் என்று நினைத்து விட்டேன், அம்மா. ஒரு காசு கூடக் கொடுக்காமல் பெண்ணைக் கொடுத்தவர்கள், பெண் ணைக் கொள்வதற்கும் எதையும் கேட்க மாட்டார்களே!'' என்று குதூகலத்துடன் தாயாரிடம் உரைத்தான் மகன்.

என்ன பேசுகிறான் மகன் என்று அபிராமிக்கு உள்ளூர உறுத்தியது. அப்படி ஒன்றும் மகனை ஒன்றுமில்லாமல் விட்டுவிட்டுப் போகவில்லையே அவர்களுடைய தந்தை?

தாயின் முகத்தில் தோன்றிய சிறு வேறுபாட்டினை உணர்ந்து, அவசரமாக, ''அம்மா, வசுவை நாம் படிக்க வைத்திருக்கிறோம். தன்மானத்தோடு வாழக் கற்றுக் கொடுத்திருக்கிறோம். 'இவர் என்னை மணக்கப் பணமும் நகையும் கேட்டாரே' என்று தோன்றிவிட்டால் அப்புறம் வாசவி மாப்பிள்ளையை மதிப்பாளா?'' என்று விளக்கம் தந்தான் சந்தானம்.

கணவனைத் தொடர்ந்து, ''அது மட்டுமில்லை, அத்தை. இப்போது நம் வீட்டை எடுத்துக் கொள்ளுங்கள். தீபாவளி, பொங்கல், ஆடி, அது இது என்று எத்தனை வருகிறது. நீங்கள் பெரிய மனதாய், 'உன் வீட்டில் செய்வதைச் செய்யட்டும், அவசியப்பட்டால் நாமே மேலே போட்டு வாங்கிக் கொள்ளலாம் என்று சொல்லி அதே போலச் செய்யவும் செய்தீர்கள். அதுபோலப் பெருந்தன்மை வேறு யாருக்கு வரும்? தீபாவளிக்கு வைர மோதிரம் போடு; பொங்கலுக்குப் படி அரிசி பொங்குகிற மாதிரி வெண்கலப் பானை கொடு; பட்டுச் சேலை கொடு; ஆடிச் சீர் சேலையில் முழு அகலம் சரிகைக்கரை இருக்க வேண்டும்; கார்த்திகைக்கு ஒன்றரைக் கிலோவில் ஒரு ஜோடி வெள்ளி விளக்கு... இப்படித் தானே பெரும்பாலும் கிடைத்தது வாய்ப்பு என்று கறக்கிறார்கள். அது போல நச்சுப் பிடித்த இடம் என்றால் வசுக் குட்டிக்கு எவ்வளவு வேதனையாக இருக்கும். இதுபோல முற்போக்கான குடும்பம் என்றால் அப்படிக் கேட்கவே மாட்டார்களே! நாமாகச் செய்தால் கூட வேண்டாம் என்பார்கள்! அதுவே வசுவுக்குப் பெருமையாகவும், சந்தோஷமாகவும் இருக்குமில்



லையா? அதைத்தான் நாங்கள் இருவரும் ரொம்பவும் நினைத்தோம்'' என்று மேலும் நன்றாகத் தெளிவுபடுத்தினாள், அபிராமியுடைய மருமகள் சுதாராணி.

மருமகளின் விளக்கம் சரியாகவே தோன்றியது அபிராமிக்கும். அவளுடைய சகோதரியுடைய சம்பந்தி வீட்டில் இந்த மாதிரி கேட்டுக் கேட்டு அந்த வீட்டில் இருக்கவே பிடிக்காமல் பெரும்பாலும் தாய் வீட்டிலேயே உட்கார்ந்து விடுவாள் அவள் மகள். புகுந்த வீட்டில் யாரையும் பார்க்கவே அவளுக்குப் பிடிக்க வில்லையாம், புருஷன் உட்பட.

அதிலும் வாசவி வேறு ஒரு மாதிரி. ரொம்பவும் கவுரவம் பார்க்கிறவள்.

'நேர் கொண்ட பார்வையும் நிமிர்ந்த நன்னடையும் தான் பெண்மையின் இலக்கணம் பாப்பா' என்று அவளுடைய தந்தையின் போதனையில் வளர்ந்தவள் அவள். கொஞ்சம் பிடிக்கா விட்டாலும் அப்படியே முகம் திருப்பி விடுவாள்.

எனவே மகனும் மருமகளும் சொல்வதுதான் சரியென்று அபிராமிக்கும் தோன்றவும், அதன்பிறகே பையனைப் பற்றி விசாரித்தாள்.

அப்போதுதான், பையனைப் பார்த்த விஷயத்தைப் பற்றி சந்தானம் கூறினான்.

மீண்டும் மீண்டும் அலைந்து அந்தக் கமலபதியின் வீட்டார் பற்றி அறிந்தது. அவர்களது பொருளாதார நிலை, பழக்கவழக்கங்கள்... ஒன்று விடாமல் மகன் விசாரித்து வைத்திருப்பதைப் பார்த்து அபிராமிக்குப் பெருமையாகவும், பிரமிப்பாகவும் கூட இருந்தது.

இரண்டு பிள்ளைகளுக்குத் தந்தையான பிறகும், இன்னமும் சிறுவனாகவே அவன் கண்ணுக்குத் தோற்றமளிக்கும் பிள்ளை, அவனுடைய தந்தையின் பொறுப்பில் ஒன்று விடாமல் நிறைவேற்றி இருக்கிறானே! அவர் கூட மாப்பிள்ளை வீட்டாரைப் பற்றி - அவர்களின் குணாதிசயங்கள் வரை இப்படி அலசியிருப்பாரோ என்னவோ!

அலசி அறிந்த வரையில் தங்கையுடைய வருங்காலக் குடும்பம் பற்றி அவனுக்கு மிகுந்த பெருமையும் கூட...

மாப்பிள்ளையையோ, அவருடைய பெற்றோரையோ இந்த வீட்டு உறவு, நட்பு என்று யாருக்கு அறிமுகம் செய்தாலும் ஒவ்வொரு முறையும் அவர்களின் புகழைப் பாடாமல் விடுவதே இல்லை.

அவர்களது முற்போக்கு எண்ணங்களைப் பற்றியும், பெண்களை உயர்வாக மதிப்பதைப் பற்றியும் சொல்லிச் சொல்லிப் பூரித்தான்.

பெண்ணோடு மூட்டை மூட்டையாகப் பணத்தையும், கிலோ கிலோவாகத் தங்கத்தையும் எதிர்பார்க்கும் மாப்பிள்ளை வீட்டார் அத்தனை பேரும், 'என் மனைவிக்குத் தேவையான அணிமணிகளை நானே தருவேன். உன் வீட்டிலிருந்து ஒரு குன்றுமணிப் பொன் கூடக் கொண்டு வரவேண்டாம்' என்று வாசவியை மணக்கும் கமலபதியின் காலில் விழுந்து அறிவு பெற வேண்டும் என்று அறிவித்தான்.

உன்னதப் பிள்ளைக்கேற்ற பெற்றோரா அல்லது உன்னதப் பெற்றோர் வழிப் பிள்ளையா என்று அதிசயப்பட்டான்.

இந்தப் பெண்ணை மணந்தால் பிற்பாடு நம் பிள்ளைக்கு என்ன சொத்து பத்து தேறும் என்று கணக்கெடுத்த



பிறகே திருமணப் பேச்சு எடுக்கும் இந்தக் காலப் பெற்றோர் நடுவில், வீட்டுப் பொருளாதார நிலை பற்றி அவனே சொல்ல முயன்றால் கூட காது கொடுத்துக் கேட்க விரும்பாத தன்மை குறித்து வியந்தான்.

வாசவி மட்டுமே போதும், அவள் மூலம் எந்த வருமானமும் எங்களுக்குத் தேவையில்லை என்று கூறும் சான்றாண்மை உள்ள குடும்பத்தில் தங்கை வாழப் போவது பற்றிப் பெருமைப்பட்டான். திருமணச் செலவில் கூடப் பாதியை வேறு எந்த மாப்பிள்ளை வீட்டார் ஏற்றுக் கொள்கிறார்கள் என்று அடித்துக் கேட்டான்.

''திரும்பத் திரும்ப இதைச் சொல்ல வேண்டாம், சந்தானம். உலகில் ஆயிரம் பேருக்கு ஆயிரம் கொள்கைகள் இருக்கும். எங்களது கோட்பாடு இது. அவ்வளவே. இதை இவ்வளவு பெரிதுப்படுத்திப் பேசத் தேவையே இல்லை'' என்று மணமகளுடைய பெற்றோர் சந்தானத்திடமும், ''மீண்டும் மீண்டும் உன் அண்ணன் புகழ்ந்து கொண்டே இருப்பது எனக்குக் கூச்சமாக இருக்கிறது. இனி இந்தப் பேச்சு வேண்டாம் என்று அவரிடம் சொல்லேன்'' என்று கமலபதி மனைவியிடமும் கேட்டுக் கொண்ட பிறகும் கூட சந்தானத்தின் பெருமை ஓயவில்லை.

என்னதான் கணவன் கூச்சம் என்றாலும், அண்ணனின் பேச்சைக் கேட்கக் கேட்க, வாசவியின் முகம் பெருமிதத்தால் விகசிக்க, அதையும் கண்டு தாயார் மனமகிழ்ந்தாள்.

புதிதாகப் பரவி வந்த நாகரீகத்தின்படி, மணமக்கள், தங்கள் முதல் இரவை ஒரு பெரிய ஓட்டலில் கழிப்பதாகவும், மறுநாள், மதியம் பெண் வீட்டில் விருந்து வைத்து, மாலையில் கணவன் வீட்டில் கொண்டு விடுவதாகவும் ஏற்பாடு.

திருமண மண்டபத்திலிருந்து மணமக்களை ஓட்டலுக்கு அழைத்துச் செல்வதாக இருந்த சந்தானம் கடைசி நேரத்தில் தயங்கினான்.

திருமண மண்டபத்திலிருந்து வாசவி கிளம்பிச் சென்றதும் அம்மா தனிமையாக உணர்வார்களே; அருகில் அவனும் இல்லாது எப்படி விட்டு விட்டுப் போவது?

''எங்களுடனேயே அழைத்துச் சென்று ஓட்டலில் இருவரையும் விட்டு விட்டு, அதன் பின் நாங்கள் எங்கள் வீட்டுக்குப் போகிறோம்'' என்று மாப்பிள்ளையின் தந்தை சகஜமாகப் பொறுப்பை ஏற்றுக் கொண்டார்.

''நாங்கள் என்ன, சின்னப் பிள்ளைகளா? நாங்கள் போய்க் கொள்வோம்'' என்ற மகனிடம், ''இன்று ஒருநாள் நாங்கள் சொல்கிறபடிதான் நீ நடந்தாக வேண்டும். நாளையிலிருந்து உன் குடுமி வாசவி கையில்'' என்று சிரித்தவரின் பின்னே ஓடினான் சந்தானம்.

''சார், 'செக் இன்' பண்ணும் போது பணம் தருவதாகச் சொல்லியிருந்தேன். இப்போது...'' என்று கூறி சட்டைப் பையினுள் கையை விட்டான்.

''அதெல்லாம் நாங்களே பார்த்துக் கொள்கிறோம். நீங்கள் உங்கள் தாயாரைப் பாருங்கள், போங்கள் தம்பி'' என்று கூறி அவர் முன்னே நடக்க, சந்தானம் பின் தங்கி நின்றான்.

திருமண மண்டபத்தைக் காலி செய்து, எல்லாவற்றையும் எடுத்துக் கொண்டு வீடு வந்து சேர, மணி பதினொன்றரை ஆகிவிட்டது.

தூக்கம் கலைந்தது. சிணுங்கிய பேரக் குழந்தைகளை அபிராமி சமாதானப்படுத்தி உறங்க வைக்க, ஓரளவு சாமான்களைக் கணவனும் மனைவியுமாக ஒதுங்க வைத்தார்கள்.



ஒரு வழியாக அவரவர் அறைக்குள் முடங்கி விளக்கணைத்தபோது மேலும் ஒரு மணி நேரம் சென்று விட்டது.

உடல் களைத்திருந்த போதும் அபிராமிக்கு உறக்கம் வர மறுத்தது.

அவளுடைய சின்ன, செல்ல மகளுக்கு இன்று திருமணம் நடந்தேறி விட்டது! அவள் பிறந்தது, வளர்ந்தது என்று ஒவ்வொன்றாக நினைவு வரவர, அப்போதெல்லாம் கூட இருந்த கணவர் இன்று இந்த நல்ல நாளைப் பார்க்க உயிரோடு இல்லையே என்ற ஏக்கம் உண்டாயிற்று. அந்த ஏக்கத்தைத் தொடர்ந்து, தந்தையின் பொறுப்பை ஏற்று நல்லபடியாக நடத்தி வைத்தான் மகன் என்ற பெருமிதமும் ஏற்பட்டது.

பொட்டுக் கண் மூடத் தோன்றாது போய்விட, சற்று நேரம் காற்றாட நின்று விட்டு வந்தால் தூக்கம் வரக் கூடும் என்று தோன்றவும் எழுந்து ஹால் கதவைத் திறந்து கொண்டு வெளியில் வாயில் வராந்தாவில் கிடந்த நாற்காலியில் சென்று அமர்ந்தாள்.

அப்போதுதான், உச்சந்தலையிலேயே இடி விழுந்தாற் போல, அவளுக்கு ஓங்கி ஓர் அடி விழுந்தது!

திடுமென வராந்தாவை அடுத்திருந்த அறைச் சன்னல் வழியே கலகலவென்று மருமகளின் சிரிப்புச் சத்தம் கேட்கவும், அபிராமிக்குக் கொஞ்சம் கூச்சமாகி விட்டது.

இவர்களும் சின்னஞ்சிறுசுகள் இங்கே ஒருவர் இருக்கக் கூடும் என்ற எண்ணம் இல்லாமல் ஏதாவது பேசிவிடப் போகிறார்கள்; அதனால் உள்ளே போய் விடலாம் என்று அவள் எழுந்தபோது, மருமகளின் குரல் குதூகலத்துடன் பேசுவது கேட்டது.

''ஆனாலும் நீங்கள் பெரிய ஆள்தான் சது. மாப்பிள்ளை வீட்டாருக்கு ஐஸ்மேல் ஐஸ் வைத்து, அப்படியே

பணத்தையெல்லாம் அமுக்கி விட்டீர்களே! கடைசியாக அந்த ஓட்டல் பணத்துக்கு 'மொங்கான்' வைத்தபோது, சிரிப்பை அடக்க முடியாமல் நான் திணறிப் போய்விட்டேன் தெரியுமா?'' என்று மீண்டும் சிரித்தாள்.

கூடச் சேர்ந்து நகைத்து விட்டு, ''எல்லோர் காதுகளிலும் விழும்படி எப்படி அவர்கள் புகழ் பாடினேன், பார்த்தாயா? இனிமேல் ஒரு சின்னக் காதுத் திருகாணி வேண்டும் என்று கேட்கக் கூட அவர்களுக்கு வாய் எழும்புமா? எப்படியோ இரண்டு ஆண்டுகள் தேடி, ஒரு வழியாக நம் உடைமைகள் எதுவும் பறிபோகாமல் எல்லாவற்றையும் காப்பாற்றி விட்டோம். அம்மாவின் ஐம்பது பவுன் நகைகள், தொழில் எல்லாமே விள்ளாமல் விரியாமல் நம் பிள்ளைகளுக்கு என்று முடித்தாயிற்று. பெரிய வேலை நமக்குச் சாதகமாக, நல்லபடியாக முடிந்தது!''

காது பிளக்கும் முழக்கமோ, கண் கூசும் வெளிச்சமோ இல்லாமல் திடுமெனத் தலையில் விழுந்த இடியால், நிலை கலங்கி, வேரோடி விட்டவள் போலச் சற்று நேரம் அப்படியே நின்று விட்டாள் அபிராமி.

இரண்டு ஆண்டுகளாக மகன் தேடியது, அவன் தங்கைக்குப் பொருத்தமான மாப்பிள்ளை என்று எண்ணினாளே! கடைசியில்...

'நம் பிள்ளைகளா?'

ஓசையின்றி உள்ளே சென்று படுத்தவள், வெகு நேரம் யோசித்து விட்டு, விடிகாலை நேரத்தில்தான் மெல்லக் கண்ணயர்ந்தாள். காலையில் எழுந்து, விருந்து வேலையில் மும்முரமாயிருந்த மருமகளிடம் சற்று வெளியே போய் வருவதாகச் சொல்லிக் கிளம்பிச் சென்று வந்தாள்.

விருந்து மிகவும் சிறப்பாக நடைபெற்றது.



மகனும் மருமகளும் சம்பந்தி வீட்டாரை விழுந்து விழுந்து உபசரிப்பதைச் சலனமற்று அபிராமி பார்த்துக் கொண்டிருந்தாள்.

வாசவி கிளம்பியபோது, அவளோடு சேர்ந்து ஒன்றாகச் செல்லாமல், அடுத்த டாக்சி ஒன்றில் அபிராமியும் ஏறிக் கொண்டாள்.

அங்கே அவர்கள் வீட்டில், வாசவியின் புகுந்த வீட்டார் மாலை விருந்து ஒன்று ஏற்பாடு செய்திருந்தார்கள்.

விருந்து முடிந்து, விடை பெறுகிற நேரம் வந்தது.

எல்லோரிடமும் சொல்லிக் கொண்டு, கடைசியாக மகளிடம் வந்து நின்றாள் அபிராமி.

''கண்ணு, உன் புகுந்த வீட்டார் எல்லோரும் மிகவும் பெருந்தன்மை உள்ளவர்கள். எதுவுமே வேண்டாம் என்றார்கள். என்றாலும், அப்படி ஒன்றுமே இல்லாமல் உன்னைப் புகுந்த வீடு அனுப்ப உன் அண்ணன், அண்ணிக்கு மனம் வருமா? அல்லது எனக்குத்தான் அது சம்மதமாகுமா? 'உன் நகைகள் எல்லாம் உன் மகளுக்கு' என்று முன்பே உன் அப்பா சொல்லியிருக்கிறார். அப்பாவின் சொல்லோ உன் அண்ணனுக்கு வேதம். ஆனாலும் உன் வீட்டாரை மீறி எப்படிக் கொடுப்பது என்று அவன் திணறியதால், அந்தப் பொறுப்பை நான் ஏற்றுக் கொண்டேன். இந்தம்மா...'' என்று உரைத்தபடி, கைப்பையில் வைத்திருந்த பல நகைகளை எடுத்து வாசவிக்கு அணிவித்தாள்.

''எதற்...'' என்று மறுக்க முயன்ற மகளைத் தாயின் விழிகளின் ஒரு பளிச்சிடலும், கைகளின் அழுத்தமும் அடக்கின.

அபிராமி பேசிய விதத்தால், வாசவியின் வீட்டுப் பெரியவர்களும் மேலே தடுத்துப் பேச முடியாது வாளா நின்றனர்.

மகளின் கழுத்திலும், கைகளிலும் பளபளக்கும் புதிய நகைகளை அணிவித்துவிட்டு, காதணிப் பெட்டிகளை அவள் கையில் கொடுத்து விட்டு, "நன்றாயிருக்கிறதில்லையா, சுதா?" என்று மருமகளை அழைத்து அபிப்பிராயம் கேட்டாள் அபிராமி.

அயர்ந்து நின்றவள் இந்த அழைப்பில் திடுக்கிட்டு, உடனே சமாளித்து, முன்னே வந்து பார்ப்பது போலப் பாவனை செய்து, "பிரமாதம், அத்தை!" என்றாள்.

திரும்பி வந்த பயணத்தில், வண்டியில் பிள்ளைகளின் சத்தம் மட்டும்தான் கேட்டது.

வீடு வந்து சேர்ந்த பிறகும், மகனும் மருமகளும், அதிர்ச்சியைச் சமாளிக்க முடியாமல் திணறுவதைக் கண்டு அபிராமி, அவர்களை உட்காரச் சொல்லித் தானும் அமர்ந்தாள்.

இழப்போடு கூட, ஒன்றுமே சொல்லாமல் தான் செயல் பட்ட விதம்தான் இவர்களை இவ்வளவு பாதித்து விட்டது என்பதை உணர்ந்து, "பகலில் பக்கம் பார்த்துப் பேசு; இரவில் அதுவும் பேசாதே என்பார்கள்" என்றாள் மெதுவாக.

"அம்மா!" என்றான் சந்தானம் அறை விழுந்தவன் போல.

மகனை நேராகப் பார்த்து அபிராமி பேசலானாள். "கண்ணா, இந்த டௌரி, வரதட்சணை, சீர், செனத்தி என்ற வார்த்தைகளெல்லாம் ரொம்பவும் கொடுமையானவை தான். வற்புறுத்திப் பெறும்போது மிகவும் அருவருப்பானவையாகவும் தோன்றுகின்றன. ஒருநாள், நம் பழக்க வழக்கங்களில் இருந்து நீக்கப்பட வேண்டியவையும் கூட.

"ஆனால் கண்ணா, சற்று யோசித்துப் பார், நான் உன்னை எப்படிப் பத்து மாதம் சுமந்து பெற்றேனோ



அதேபோல, உன் தங்கையும் அதே பத்து மாதங்கள் என் வயிற்றில் வாசம் செய்திருக்கிறாள். எப்படி உன் அப்பா உனக்குத் தந்தையோ, அதேபோலத்தான் வாசவிக்கும். அப்படியிருக்க, ஒரு பெண்ணாக இந்தப் பூமியில் பிறந்து விட்ட ஒரே காரணத்திற்காக, அவளுக்கு மட்டும் இந்த வீட்டு சம்பத்துகளில் ஒன்றுமே கிடையாது என்று ஒட்டி விடுவது எப்படி நியாயமாகும்?

'என் மனைவிக்குத் தேவைப்பட்டதை என்னால் வாங்க முடியும்; அவள் பிறந்த வீட்டில் இருந்து எதுவும் கொண்டு வரவேண்டியது இல்லை' என்று மாப்பிள்ளை சொன்னதும், அப்படியே அவர் வீட்டில் நடந்து கொண்டதும் இன்றைய நம் நாட்டு நிலையில் போற்றுதற்குரிய விஷயம்தான். ஆனால் அது அவர்கள் வீட்டு விஷயம். நம் வீட்டு விஷயம்?

உன் தந்தை உனக்குத் தொழிலில் பங்கு கொடுத்திருக்கிறார். அவரது மறைவினால் எனதாகி இருக்கும் பாகத்தையும் எனக்குப் பின், நான் உனக்குத்தான் தரப் போகிறேன். அதே சமயம், எங்களுடைய இன்னொரு மகளான உன் தங்கைக்கும் இதற்குச் சமமாக ஏதாவது செய்ய வேண்டியது எங்கள் கடமையல்லவா? அதை நீ தட்டி விட முயற்சிக்கலாமா!

"இன்னமும் ஒன்றை நன்றாகச் சிந்தித்துப் பார். நாளை வளர்ந்து பெரியவன் ஆன பிறகு, உன் மகன், உன் மகளான தன் தங்கைக்கு ஒன்றுமே கொடுக்கக் கூடாது; எல்லாம் தனக்கே என்றால் அப்போது உனக்கு எப்படி இருக்கும்?"

குறை கூறவோ, குற்றம் சாட்டவோ இல்லாமல் அழுகை ஆர்ப்பாட்டமின்றி, சாந்தமான குரலில் அபிராமி பேசி முடிக்கவும் சற்று நேரம் அங்கே அமைதி நிலவியது.

உள்ளறையில், "இந்தா விஜு, புது மாமா வாங்கித் தந்த 'டெய்ரி மில்க்' உனக்கு ஒன்று; எனக்கு ஒன்று.

அப்புறம் எக்லேர்ஸ்..'' என்று சந்தானத்துடைய மகனும் மகளும் பங்கு வைத்துக் கொண்டிருந்தது இதமாகக் காதில் விழுந்தது.

மகன் இன்னமும் பிரமித்து நிற்க, மருமகள் சட்டென்று அபிராமியின் கால்களில் விழுந்தாள். ''அவர் மேல் தப்பில்லை, அத்தை: நான் தான்.. எனக்குத் தான் பேராசை பிடித்துக் கொண்டு விட்டது. வாசவியுடையதையும் சேர்த்து என் மகளுக்குப் பெரிய அளவில் செய்யலாமே என்று எண்ணி இப்படியெல்லாம் செய்யும்படி அவரைக் கரை யாய்க் கரைத்தேன். ஆனால், நாளை என் மருமகள் நான் செய்ததையே செய்து விட்டால்? உங்களைப் போன்ற உத்தமிக்கு மகளாகப் பிறந்த புண்ணியம் வாசவிக்கு நல்ல இடத்தில் திருமணமாயிற்று. ஆனால், இந்தப் பாவியின்..'

சந்தானத்தின் முகத்திலும் அச்சம் பரவுவதைக் கவனித் துவிட்டு, ''ஷ்... சுதா, தவறுவது இயற்கை. தவறை உணர்ந்து திருந்தி விட்டவர்களே உத்தமர்கள். உன் பிள்ளை களும் உன்னதமாகவே வாழ்வார்கள்'' என்று ஆறுதலோடு ஆசியும் வழங்கினாள் அபிராமி.